மாலை தீப்பொறி
MALAE THEEPORI



**ஒன்றிய அரசே!**
**புதிய குற்றவியல் சட்டங்களை,**
**நீட் தேர்வை ரத்து செய்!**

2024 ஜுலை 1-15 தொகுதி 22 இதழ் 20

விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200

# 2024 ஜுலை 1 : நாடு தழுவிய எதிர்ப்பு நாள்



கொல்கத்தா



டெல்லி


பாட்னா


புதுக்கோட்டை



சேலம்


உளுந்தூர்பேட்டை



சென்னை

# இயக்கங்களால் பெற்ற வெற்றி; இயக்கங்கள் பெற்ற வெற்றி !

## இகக(மாலெ) மக்களவை உறுப்பினர் தோழர் ராஜாராம்சிங்குடன் தோழர் சந்திரமோகன் கலந்துரையாடல்

**பீகாரில் இருந்து சிபிஐஎம்எல் மக்களவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளீர்கள், புரட்சிகர வாழ்த்துக்கள், எப்படி உணர்கிறீர்கள்?**

ராஜாராம்சிங்: இப்போது நாம் இரண்டு எம்.பிகளைப் பெற்றுள்ளோம்; மக்கள் இயக்கங்கள், அவற்றுக் கான குரலை பாராளுமன்றத்தில் ஒலிக்கும் உறுப்பி னர்களை பெற்றுள்ளன. விவசாயிகளும் மற்ற இயக்கங்களும் வெற்றி பெற்றுள்ள மக்களவை உறுப்பினர்களால் சக்தி பெற்றுள்ளதாகவும் சொல்ல முடியும்.

**உங்கள் தேர்தல் பரப்புரை பணிகள் பற்றி...**

தேர்தல் பரப்புரையில், எங்கள் கவனம், அரசமைப்புச் சட்டம், ஜனநாயகம், விவசாயம், வேலைவாய்ப்பை பாதுகாப்பதிலும், அதற்காக வாதிடுவதிலும் இருந்தது. இந்த பிரச்சினைகளில் எங்களால் மக்களை அணிதிரட்ட முடிந்தது. உண்மையில் மக்கள் நமது அரசியல் செய்திகளை உள்வாங்கிக் கொண்டனர். இரண்டு மாத கால தேர்தல் பரப்புரை மிகவும் கடினமானதாக இருந்தது. ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் தேர்தல் அலுவலகங்கள், பிரச்சார வாகனங்களைக் கொண்டிருந்தோம். தேர்தல் பிரச்சாரத்திற்கான ஒற்றுமை, ஒருங்கிணைப்பு மற்றும் செயல்பாட்டு உணர்வை வளர்ப்பதற்காக மகாகத்பந்தன் (இந்தியா) கூட்டணி சார்பில், பாராளுமன்ற தொகுதி அளவில் தலைவர்கள் பங்கெடுத்த கொண்ட கூட்டங்கள் இரண்டை நடத்தினோம்; சட்டமன்றப் பகுதி வாரியாக ஊழியர் மாநாடுகளையும் நடத்தினோம்.

**அகில இந்திய விவசாயிகள் மகாசபையின் பொதுச் செயலாளராகவும், எஸ்கேஎம் தலைவர் களில் ஒருவராகவும் இருப்பதால், கிராமப்புற இந்தியாவின் சார்பாக மக்களவையில் நீங்கள் எழுப்பவுள்ள பிரச்சனைகள் பற்றி....**

குடியரசு தலைவர் உரையில், விவசாயிகள் இயக்கத்தின் முக்கிய கோரிக்கையான குறைந்தபட்ச ஆதார விலை (சி2+50%) என்பதை சேர்க்க வேண்டும் என நான் திருத்தங்களை தந்துள்ளேன். எதிர் வரும் நாட்களில், பாசன வசதிகள், மாசுபடுதல் போன்ற வற்றுடன் விவசாயிகள், சாகுபடியாளர்கள் சந்திக் கும் விவசாய நெருக்கடியின் பல்வேறு பிரச்சினை களையும் எழுப்பவுள்ளோம்.



**பீகார் மாநில எம்.பி.யாக கரக்காட் தொகுதி யிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நீங்கள், தொகுதிக்கும் பீகார் மக்களுக்கும், ஆற்றக்கூடிய பங்கு என்னவாக இருக்கும்?**

பீகார் மாற்றத்தை எதிர்நோக்கும் மாநிலம்; இது பின்தங்கிய மாநிலம், பீகாருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்க வேண்டும் எனக் கோருகிறோம். மேலும், பீகாரில் சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தியது போல, தேசிய அளவிலும் நடத்த வேண்டுமென்றும் கோருகிறோம். எங்கள் கட்சி ஏழைகளின் கண்ணியம், உரிமைகளுக்காகப் போராடி வருகிறது; நாங்கள் பாராளுமன்றத்தில் அவர்களின் குரலை ஒலிக்க கடமைப்பட்டுள்ளோம். அரசியல் சட்டத்தில் மதச்சார்பின்மை, சோசலிசம் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதற்காகவும் போராடுவோம்.

மகத், ஷஹாபாத்தின் பல மாவட்டங்களின் வாழ் வாதாரமாக சோன் கால்வாய் கட்டமைப்பு திகழ்கிறது. அது, தற்போது மோசமான நிலையில் உள்ளது. இது நவீன கால இந்தியாவில், 1874 இல் கட்டப்பட்ட பழமையான கால்வாய் அமைப்பு ஆகும். பீகார் விவசாயத்தின் முதுகெலும்பாகும். இந்த சோன் கால்வாய் கட்டமைப்பை நவீனமய மாக்கும் திட்டத்தையும், இந்திரபுரி அணையை உடனடி யாக கட்ட வேண்டும் என்பதையும் எழுப்புவோம்.

**பாராளுமன்றத்திற்குள் இடதுசாரிக் கட்சி எம்.பி.க்களின் பங்கு என்னவாக இருக்கும்?**

இடதுசாரிகள், பிற மதச்சார்பற்ற, முற்போக்கு உறுப்பினர்களுக்கு இடையே ஒரு ஒருங்கி ணைப்பை உருவாக்குவோம்; சனநாயகத் தையும், அரசமைப்புச் சட்டத்தையும் பாதுகாக்கப் போராடு வோம்.

**இந்தியா கூட்டணி மக்களவை உறுப்பினர்க ளுடனான அவை ஒருங்கிணைப்பு பற்றி... மோடி 3.0 ஆட்சிக்கு எதிராக இந்தியா கூட்டணி மூலம் எழுப்பப்படும் பிரச்சனைகள், வழிமுறைகள் பற்றி...**

இந்தத் திசையில் முயற்சிகள் தொடங்கப் பட்டுள்ளன. இந்தியா கூட்டணியாக நாங்கள் ஒன்று பட்டுள்ளோம். ❑

மாலெ தீப்பொறி

இருவார இதழ்
2024 ஜூலை 01-15
தொகுதி 22 இதழ் 20

முதன்மை ஆசிரியர்
சங்கர் .வீ

ஆசிரியர்
ஜி.ரமேஷ்

ஆசிரியர்குழு
பாலசுந்தரம்
பழ.ஆசைத்தம்பி
அ.சந்திரமோகன்
கே.ஜி.தேசிகன்

மேலாளர்
சொ.இரணியப்பன்

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்)**

தமிழ்நாடு மாநிலக் கமிட்டியின் அரசியல் ஏடு

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம், சென்னை – 23

நிர்வாக அலுவலகம்
3/254பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை – 600048

தொலைபேசி: 9443507067
9840340741

www.tamilnadu.cpiml.net
malaetheepori@gmail.com

# ஜூலை 28 அழைப்பு

தோழர் சாரு மஜூம்தார் தியாகியான 52 வது ஆண்டில், கட்சி மறுகட்டமைப்பு இயக்கத்தின் 50வது ஆண்டில் வளர்ச்சி, விரிவாக் கத்தின் புதிய கட்டத்தை நோக்கி கட்சியை அணியப் படுத்துவோம்.

பாட்னாவில் நடைபெற்ற கட்சியின் 11 ஆவது காங்கிரஸ், கட்சி தனது அனைத்து வலிமையும் ஒன்றுதிரட்டி இந்திய பாசிசத்திற்கு எதிரான எதிர்ப்பு போராட்டத்தை தீவிரப்படுத்துமாறு கட்சிக்கு வழிகாட்டியது. நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தப் போராட் டத்தில் 2024 தேர்தல்கள் இந்திய மக்களுக்கு ஒரு மிகப் பெரிய சோதனையாக அமைந்தது. பாசிச ஆட்சிக்கு மக்கள் மாபெரும் அடி கொடுத்துள்ளனர். தேசம் தழுவிய இந்த மாபெரும் இயக்கத்தில் நம்முடைய அனைத்து சக்திகளையும் ஒன்றுதிரட்டி, மிகப்பெரிய பங்காற்றி, சில வெற்றிகளையும் பெற்றுள்ளோம். அதற்காக மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். அனைத்து பகுதிகளிலுமுள்ள தோழர்கள் இதில் கடுமையாக பணியாற்றியுள்ளனர். விஷ்ணுதேவ் யாதவ், தினேஷ் சிங், அசோக் சிங் ஆகிய தோழர்கள் இந்தப் போராட்டத்தில் தியாகி யானார்கள். கனத்த இதயத்துடன் இந்த தோழர்களை நினைவு கூர்கிறோம்.

2024 தேர்தல் முடிவுகள், நம்மை மேலும் அதிக அளவு பொறுப்புள்ளவர்கள் என்ற நிலைக்கு கொண்டு சென்றுள்ளது. நாடாளுமன்றத்தில் நம்முடைய பங்கை நாம் சிறப்பாக ஆற்றிட வேண்டும். நாடாளுமன்றத்திற்கு வெளியே மக்களுடைய போராட்டங்கள் என்ற பரந்து விரிந்த தளத்தில் நம்முடைய அதிகரித்த பங்கையும் அதோடு இணைக்க வேண்டும். 2020, 2024 தேர்தல்களில் பீகாரில் நாம் பெற்ற அடுத்தடுத்த வெற்றிகளை நிச்சயமாக முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதன்மூலம் நம்முடைய கட்சியை ஒரு வலுவான நிலைக்கு கொண்டு செல்ல வேண்டும். மற்ற மாநிலங்களிலும் கூட புதிய சூழ்நிலையை பயன்படுத்திக் கொண்டு நிச்சயமாக நம்முடைய கட்சியை முன்னணிக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

பாஜக தனது தனிப் பெரும்பான்மையை இழந்துள்ளது. கணிசமான பலவீனத்துடன் இந்த அரசாங்கம் திரும்ப வந்துள்ளது. ஆனால் எதுவும் நடக்கவில்லை என்பது போல இந்த அரசாங்கம் பாசாங்கு செய்ய முயற்சிக்கிறது. மோடி மீண்டும் பிரதமராகியுள்ளார். அமித்ஷா மீண்டும் உள்துறை அமைச்சராகவும், ஓம் பிர்லா நாடாளுமன்ற அவைத் தலைவராகவும் ஆகியுள்ளனர். இவற்றைக் கொண்டு பார்க்கும் போது,மோடி அரசாங்கம் மக்களின் வாழ்வாதாரம், அரசமைப்புச் சட்டம், நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பு முறை ஆகியவற்றின் மீது ஒவ்வொரு நாளும் நடத்திய தாக்குதலுடன் ஆட்சி செய்த இரண்டாவது ஆட்சிக் காலத்தை போலவே, பெரும்பாலும் அதே வழியிலேயே, தனது மூன்றாவது பதவி காலத்தையும் நடத்திச் செல்ல முயற்சிக்கும். மேலும் சங்கிப் படையணியின் படுகொலை கும்பல்களும் கலவரப் படைகளும் மீண்டும் தெருக்களுக்கு வந்து விட்டன. அரசு நடத்தும் ஒடுக்கு முறைக்கு இசைவாக அரசு ஆதரவுடன் நீதித் துறைக்கு புறம்பான தனியார்மயமாக்கப்பட்ட தெரு வன்முறை இயக்கத்துடன் தொடர் வன்முறைகளை மீண்டும் அரங் கேற்றுகின்றனர்.

2024 மக்கள் தீர்ப்பின் திசைவழியையும் உணர்வையும் காண்போமானால் மக்கள், மோடி அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர். அதே வேளை, நாடாளுமன்றத் திற்குள்ளும் வெளியிலும் ஒவ்வொரு பிரச்சனையிலும் மோடி அரசாங்கத்தை எதிர்கொள்ள போதுமான வலிமையை இந்தியா கூட்டணிக்கு வழங்கி உள்ளனர். சங்கிப்படை யணியின் பாசிசத் தாக்குதலுக்கு எதிராக அரசியல், சமூக சக்திகளின் பரந்து விரிந்த ஒற்றுமையும் மக்களுடைய இயக்கங்களையும் உருவாக்க வேண்டும் என்ற

பரந்த வெகுமக்களின் வேட்கையை வெளிப் படுத்துவதில் நாம் முக்கியமான பங்காற்றி இருக்கிறோம். உள்ளூர் நிலைமைகளில் ஒருவருக் கொருவர் எதிராக சண்டையிட்டுக் கொள்ளும் சக்திகள் உள்ளிட்ட அரசியல் சக்திகளை அகில இந்திய அளவிலான அரவணைத்துக் கொள்ளும் ஒற்றுமை மேடையாக இந்த செயல்முறையில் இந்தியா கூட்டணி உருவானது. இந்த செயல் முறையை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வதில் நிச்சயமாக நாம் பங்காற்றிட வேண்டும். அதன்மூலம் அடுத்த சுற்று சட்டமன்ற தேர்தல்களில் பாஜக விற்கும் என்டிஏவிற்கும் மேலும் பெருத்த அடி கொடுக்க வேண்டும்.

இந்த குறிப்பிட்ட தருணத்தில் மிக வலுவான, கூடுதல் ஆற்றல்வாய்ந்த இடதுகளின் தலை யீட்டிற்கு இககமாலெவின் விரிவாக்கமும் வலுப்ப டுதலும் முக்கிய பங்கு வகிக்கும். மேலும் பாசிச ஆட்சிக்கு தீர்மானகரமான தோல்வியை உறுதி செய்வதற்கு இது அவசியமாகும். இந்த ஜூலை 28 இல் தோழர் சாரு மஜூம்தார் தியாகியான 52வது ஆண்டினையும், கட்சி மத்தியக் கமிட்டி மறு கட்டமைப்பு செய்யப்பட்ட 50வது ஆண்டி னையும் கடைப்பிடிக்கிறோம். அடுத்தடுத்து வந்த கட்சி மறுகட்டமைப்பும், சீர்செய் இயக்கமும் கட்சி அவசரகால நிலையை, 1970களின் பின்னடைவை எதிர்கொண்டு தாக்குப்பிடித்து நின்றதை சாத்திய மாக்கின. கட்சியை ஒருங்கிணைந்த வளர்ச்சி பாதையில் கொண்டு செல்லவும், அகில இந்திய விரிவாக்கத்திற்கும் வழிவகுத்தன. இன்றைய கால கட்டத்தின் சவால்களுக்கு பதிலளிப்பதற்கு இன்று கட்சிக்கு அதே போன்றதொரு விரிவாக்கமும், வலுப்படுத்தலும் தேவையாக உள்ளது. ஜூலை இயக்கம் இந்த புதிய கட்டத்திற்கு கட்சியைத் அணியப்படுத்தட்டும்.

**மத்திய கமிட்டி,**
**இககமாலெ விடுதலை**

---

*தீர்ப்பு 2024:*

# சுட்டும் திசைகள் கிட்டும் பாடங்கள்

**திபங்கர்**

*2024 தேர்தல்கள் பாஜகவிற்கு மாபெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. பெரும்பான் மைக்கு 32 இடங்கள் குறைந்து போய் விட்டது. 240 இடங்களில் நின்று போயிருக்கிறது. இந்த முடிவுகள், கிட்டத்தட்ட, எதிர்க்கட்சிகளுக்கு ஒரு வெற்றி போலவும் பாஜகவிற்கு ஒரு தோல்வி போலவும் அமைந்துள்ளது. ஏனென்றால், இந்தியாவில் இதுநாள் வரை நடைபெற்ற தேர்தல்களிலேயே, அனைவருக்கும் சமவாய்ப்பே வழங்கப்படாத ஒரு தேர்தலில் இத்தகைய தீர்ப்பை பெற்றிருப்பதே இதற்கான காரணமாகும். ஊடகங்கள், தேர்தல் ஆணையம், நிர்வாக எந்திரம் அனைத்தும் ஒருதலைப் பட்சமாக, பாஜகவுக்கு ஆதரவாக செயலாற்றின. ”பாஜகவிற்கு 370, என்டிஏ கூட்டணிக்கு '400 க்கும் மேல்” என மீண்டும் மீண்டும் தம்பட்டம் அடிக்கப்பட்ட இலக்கோடு ஒப்பிடும்போது, பெரும்பான்மை கூட கிடைக்கவில்லை என்பது, வெறும் 240 தொகுதிகளே என்பது மிகமிக குறைவானதே. தேர்தல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே பாஜகவின் சுருதி இறங்கி விட்டது. ”400க்கும் மேல்” என்பது, தொடர்ச்சியாக 'மூன்றாம் முறையாக மீண்டும் மோடி' என்பதாக சுருங்கிப் போய்விட்டது. ஆனால், தேர்தல் முடிந்ததும் வெளியிடப்பட்ட கருத்துக் கணிப்புகள், மீண்டும் ஒருமுறை அதீத கற்பனைகளை தூண்டி விட்டன. அதன்மூலம், திட்டமிட்ட விதத்தில் பங்குச் சந்தை மதிப்பு விண்ணில் பாயுமாறு செய்யப் பட்டது. மோடியும் ஷாவும் அதானி தொலை காட்சிகளும் ஜூன் 4 க்குள் பங்குகளை வாங்கச் சொல்லி கூக்குரலிட்டன. அறிவுரை வழங்கின. ஆனால், அது வாக்கு எண்ணிக்கை நாளில் பங்குச் சந்தை அதலபாதாளத்தில் சரிவதற்கு கட்டியம் கூறுவதாக மட்டுமே இருந்து.*

*தெலுங்கானாவில் 15.4, ஆந்திர பிரதேசத்தில் 10.3, தமிழ்நாட்டில் 7.6, ஒடிசாவில் 6.4, கேரளாவில் 3.7 என கடலோர, தென்னக பகுதிகளில் பாஜக வாக்குகளின் பங்கு பெருமளவு அதிகரித்த போதும் கூட, அது 2019 இல் பெற்ற வாக்குகளையே மீண்டும் தக்கவைக்க முடிந்தது. அது 37.3% லிருந்து 36.5% ஆக ஓரளவே குறைந்தது. இதற்கு மாறாக, காங்கிரஸ் அதன் வாக்குகளின் பங்கில் வெறும் 2 சதவீதம் மட்டுமே கூடுதலாக பெற்ற போதும் கூட, அது ஏற்கனவே பெற்ற இடங்களை இரட்டிப் பாக்கியது. இருப்பினும் அந்தக் கட்சி 2019ல் 421 இடங்களில் போட்டியிட்டதை ஒப்பிடும்போது 2024 இல் 328 தொகுதிகளில் மட்டுமே போட்டியிட்டது. அப்படிப்பார்க்கும் போது காங்கிரசுக்கு கிடைத்த வாக்குகள் அதிகம்தான்.*

*பாஜக தனது இலக்கை ”400 க்கும் மேல்” என*

நிர்ணயித்தன் காரணம் என்ன? 1984 இல் காங்கிரஸ் பெற்ற சாதனை அளவான 404 இடங்களை தாண்டி செல்ல வேண்டும் என்பதற்காகவா? 2019 இல் பாஜக பெற்ற 303 தொகுதிகளுக்கும் என்டிஏ பெற்ற 353 தொகுதிகளுக்கும் அதிகமாக பெறும் நோக்கம் மட்டும்தானா? அயோத்தியில் ராமர் கோயிலை கட்டியதற்கான தேர்தல் பரிசாக இந்துக்கள் முன்னெப்போதும் கண்டிராத ஆதரவை வழங்கு வார்கள் என்கிற எதிர்பார்ப்பா? யோகியின் 80:20 என்ற சூத்திரத்தின் அடிப்படையிலா? 400 க்கும் கூடுதலான இடங்கள் எங்கிருந்து கிடைக்கும் என யோகியிடம் கேட்கப்பட்டபோது, தற்பெருமை கொள்ளும் அற்ப யோகி, 'உபியிலிருந்து மட்டுமே 80 இடங்கள் என நீங்கள் கணக்கு வைத்துக் கொள்ளலாம்' என அந்த தொலைக்காட்சி நிகழ்ச்சி தொகுப்பாளரிடம் கூறினார்! அதனால், பாஜக அதன் மிகமிக மோசமான அதிர்ச்சிகரமான பின்னடைவை உபியில் சந்தித்தது மிகவும் பொருத்தமானதாக இருந்தது. அங்கே அது சமாஜ்வாதி கட்சியின் முதுபெரும் தலித் தலைவரிடம் அயோத்தியை (ஃபைசாபாத்) பறி கொடுத்தது. உத்தர பிரதேசத்தில் 29 இடங்களை இழந்தது.

## முனை மழுங்கடிக்கப்பட்ட அச்சமும் வெறுப்பும்

பாஜகவின் இரண்டு முக்கிய ஆயுதங்களான அச்சமூட்டலும் வெறுப்பும் முனை மழுங்கடிக் கப்பட்டு விட்டன என்பதுதான் 2024 தேர்தல் முடிவுகளில் நாம் காணும் முக்கிய அம்சங்களாக உள்ளன. 'வெல்லற்கரியவர் மோடி' என்ற கருத்து பெரும் தோல்வியை சந்தித்துள்ளது. மிகமிக மோசமாக, முஸ்லிம்களுக்கு எதிராக, வெறுப்பு அரசியல் பரப்புரை இயக்கம் மேற்கொண்டால், இந்துக்களின் பெரும் வாக்கைப் பெறலாம் எனும் பாஜக சூத்திரம் பொய்த்துப் போய்விட்டது. வெற்று நம்பிக்கை என்பதாகி விட்டது. இந்த தேர்தல் காலத்தில் மோடி மிகவும் அதீதமாக வெறுப்பை உமிழ்ந்து உரையாற்றிய இடங்களை, அநேகமாக 20 இடங்களை, பாஜக பறி கொடுத்துள்ளது.

## மக்கள் போராட்ட இயக்கங்கள்

மிகவும் நம்பிக்கை அளிக்கும் மற்றொரு பலன் என்னவென்றால், மக்களுடைய ஆற்றலும் எதையும் தாங்கும் திறனும் ஆகும். எல்லையற்ற பண பலத்தையும், ஊடக பலத்தையும் அதிகாரத்தையும், மாபெரும் நிர்வாக ஆதரவையும் பாஜக தனது ஆயுதங்களாக பெற்றிருந்தது. அது மட்டுமல்ல, அமித் ஷாவின் சாணக்ய தனத்தால் அதிகாரம் பெற்றதாக சொல்லப்பட்ட, ஈவிரக்கமற்ற, திறன்வாய்ந்த தேர்தல் எந்திரத்தையும் ஆயுதமாக அது கொண்டிருந்தது. அது மட்டுமல்ல, அவர்கள் கையிலிருந்த மற்றொரு முக்கிய ஆயுதம் 'பன்னா ப்ரமுக்ஸ்'. அதாவது, வாக்காளர் பட்டியலில் உள்ள ஒரு பக்கத்தில் உள்ள பெயர் கொண்டவர்களை தொடர்பு கொள்வதற்கான பொறுப்பாளர்கள். தமிழில் "பக்க பொறுப்பாளர்கள்" எனலாம். பாஜகவின் வளங்களோடும் அமைப்பு வலிமை யோடும் ஒப்பிடும்போது, தாமதமாக உருவாக்கப் பட்ட இந்தியா கூட்டணி அதற்கு கொஞ்சமும் நிகரானதாக தோன்றவில்லை. அப்போதும் கூட இந்திய மக்கள் இதனை ஒரு கடும் போட்டியாக மாற்றி அமைத்தனர். மேலும் இந்துத்வா இதயப் பகுதியான உத்தரப்பிரதேசத்திலேயே பாஜகவை பெரிய அளவில் தோற்கடித்தனர். இந்தியா கூட்டணியின் அரசியல் கட்சிகளையும் தாண்டி, பல்வேறுபட்ட போராட்ட இயக்க சக்திகள், குடிமை சமூக அமைப்புகள், பரப்புரை தளங்கள், எண்ணிய (டிஜிட்டல்) தொடர்பு சாதன ஊடகங்களின் செயல்வீரர்கள் ஆகியோர் தங்களுடைய மூலாதாரங் களையும் ஆற்றலையும் ஒன்று திரட்டினர். அதன் மூலம் இந்த தேர்தலை உண்மையான மக்கள் இயக்கமாக மாற்றினர்.

இந்துத்வாவின் கருவான நிகழ்ச்சி நிரலையும், பிராண்ட் மோடி எனப்படும் மோடி துதிபாடலையும் மையமாக கொண்டதனால் பாஜக சேதமடைந்தது. 2019 போலல்லாமல், இந்த தேர்தல்களில் எவ்வித அதீத தேசியவாத அலையும் வீசவில்லை. அயோத்தியின் ராமர் கோவில் ஒரு தேர்தல் சூறாவளியை உருவாக்கும் என பாஜக எதிர்பார்த்ததும் நடக்கவில்லை. மாறாக, அந்த எதிர்பார்ப்பு பெருத்த ஏமாற்றமாக மாறிவிட்டது. சமாஜ்வாதி கட்சி அயோத்தி/பைசாபாத் தொகுதியை வென்றது மட்டுமல்ல; பாஜக இந்த ஒட்டுமொத்த மண்டலத்திலும் அனேக இடங்களில் தோற்றுப் போனது.

2024 தேர்தலை, எவ்வித தேசிய அளவிலான கதையாடலும் அற்ற 'வழக்கமான', 'உள்ளூர்' தேர்தலாக பல விமர்சகர்களும் வரையறுக்கின்றனர். ஆனால் பொருளாதாரம் குறித்த கேள்விகளும், பொதுமக்களுடைய வாழ்வாதாரம் குறித்த கவலைகளும் தேர்தல் நிகழ்ச்சி நிரலாக மாறும்போது, அரியணையில் வீற்றிருக்கும் ஆட்சியாளர்களுக்கு எதிரான வாக்குகளாக அது எதிரொலிக்கும் போது,

நிச்சயமாக, அதனை 'உள்ளூர் காரணி'யாக எடுத்துக் கொள்ள முடியாது. உண்மையில் சொல்லப் போனால், மக்களின் வாழ்வாதார பிரச்சனைகளுக்கு அக்கம்பக்கமாகவே, இந்திய ஜனநாயகம், அரசமைப்புச் சட்டத்தின் எதிர்காலம் குறித்த கவலைகளும் கூட தேர்தல் உரையாடலின் ஒரு மாபெரும் பகுதியாக மாறி இருந்தன.

ஜனநாயகம் பின்னடைவை சந்திப்பது குறித்த கவலைகளோ அல்லது இந்திய நாடாளுமன்ற ஜனநாயகம் சிதைவுற்று அதுவொரு தேர்தல் எதேச்சதிகாரமாக மாறுவதோ மேற்கத்திய பரப்புரையல்ல; நாடு முழுவதும் உள்ள மக்கள், இந்திய மக்கள் இந்த ஆபத்தை மிகவும் ஆழமாக உணருகிறார்கள் என பொருளாகும். அதனை வாக்காளர்கள் நிரூபித்துள்ளனர். கூட்டாட்சி, இட ஒதுக்கீடு முதல் மதச்சார்பின்மை, குடியுரிமை வரை அரசமைப்புச் சட்டத்தின் பல்வேறுபட்ட அம்சங்கள் மீது தொடுக்கப்பட்டிருக்கும் தாக்குதலையும் மக்கள் நேரடியாக உணர்கின்றனர். அரசமைப்புச் சட்டத்தை திருத்துவது, மாற்றுவது என்பதற்காக, 400க்கும் கூடுதலான இடங்கள் பெற வேண்டும் என பாஜக தலைவர்களே சொல்லத் தொடங்கிய போது, அது விரைவிலேயே மிகப்பெரிய பேசுபொருளாக மாறிவிட்டது. இந்தியாவின் முன்னணி கருத்துக் கணிப்பாளர் ஒருவர் தொலைக்காட்சி நேர்காணலில் ஒப்புக்கொண்டார். ஜனநாயகமும் அரசமைப்புச் சட்டமும் பொது வாக்காளரின் தேர்தல் நிகழ்ச்சி நிரலில் இடம்பெறும் என்பது குறித்த எந்த ஒரு ஆலோசனையும் இரண்டு மாதங்களுக்கு முன்பு நகைப்புக்கிடமானதாகவே இருந்திருக்கும் என்றார். ஆனால் தேர்தல் அவரது கூற்றை தவறென நிரூபித்து விட்டது என்றார்.

## ஜனநாயகத்திற்கான டிஜிட்டல் (எண்ணிய) போர்

அரசியல் செய்திகளுக்கான மிகவும் திறன்வாய்ந்த ஊடகமாக 'யூ ட்யூப்' எழுச்சி பெற்றது, இந்தத் தேர்தலின் மற்றுமொரு முக்கிய அம்சமாகும். இந்தியாவின் 'மைய நீரோட்ட ஊடகங்கள்' எனப்படுகிற பெரும்பாலானவை அரசாங்கத்தின் பரப்புரை அங்கமாக சீரழிந்து போனதால், பொதுவாக தொலைக்காட்சி காண்போரில் கணிசமானோர், அதை பார்ப்பதையே விட்டுவிட்டனர். இந்தியாவின் பல துணிச்சலான பத்திரிக்கையாளர்களுக்கு ஊடகத் தொழில் என்பது ஆட்சியாளர்களுக்கு எதிராக உண்மையை பேசுவதே என்பது இன்னும் கூட இருப்பதை காண முடிந்தது. அவர்களும் கூட தங்களது விருப்பமான தகவல் தொடர்பு சாதன தளமாக யூ ட்யூப்பையே பயன்படுத்த வேண்டியுள்ளது. இது இன்றைய இந்தியாவில் டிஜிட்டல் (எண்ணிய) ஊடகத்தின் மிகச் சிறப்பான எழுச்சியை வடிவமைத்துள்ளது. இந்த தேர்தல்களில் இந்த வெகுமக்கள் தகவல் தொடர்புக்கான புதிய கருவியின் ஆற்றலை நாம் கண்டிருக்கிறோம்.

மோடியின் செல்ல ஊடகங்கள் மூலமும், வாட்ஸ்அப் 'பல்கலைக்கழகங்கள்' மூலமும் பரப்பப்படும் வெறுப்பு, பொய்களுக்கு எதிராக, ஜனநாயகத்திற்கான டிஜிட்டல் (எண்ணிய) போராளிகளான ரவிஷ் குமார், துருவ் ரதி போன்ற ஊடகவியலாளர்கள், தகவல் தொடர்பாளர்களின் காணொளிகளும், வளர்ந்துவரும் யூ ட்யூபர்களின் சமூகமும் அதீத துணிச்சலுடன் திறன்மிக்க எதிர்ப்பைக் கட்டமைத்தனர். மோடி அரசாங்கம் தற்போது இந்த டிஜிட்டல் (எண்ணிய) ஊடகத்தின் சுதந்திரத்தை பறிக்க தீவிரமாக முயற்சிப்பதையும் அதன் குரல் வளையை கொடூரமாக நசுக்கப் பார்ப்பதையும் நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

## ஒடுக்கப்பட்டவர்களுக்கு இடையேயான ஒருமைப்பாடு

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், 2024 தேர்தல்களில் காங்கிரஸ் ஓரளவுக்கு மீட்சியடைந் திருக்கிறது என்றால் அதற்கு முஸ்லிம்கள் மொத்த மாக காங்கிரசுக்கு வாக்களித்ததனால்தான் என சொல்ல முடியாது. மாறாக, முஸ்லிம்கள் அல்லாத சமூகத்தினர், குறிப்பாக இந்து மக்களின் ஆதரவு அதிகரித்ததன் காரணமாகவே அது நிகழ்ந்துள்ளது.

இந்தக் கதையாடலின் மிகவும் விஷமத்தனமான பகுதி என்னவென்றால், நாடாளுமன்றத்தில் முஸ்லிம் களின் எண்ணிக்கை குறைந்து போனதற்கு முஸ்லிம் கள் மீதே பழி சுமத்துவதாகும். இந்திய நாடாளுமன்ற வரலாற்றிலேயே முதன்முறையாக முஸ்லீம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை பதினெட்டாவது மக்களவையில் மிகக் குறைவாக இருப்பதற்கு பொறுப்பு முஸ்லிம்கள்தானா? இந்திய நாடாளுமன்றத்தில் தனிப்பெரும் கட்சியாக இருக்கிற பாஜக முஸ்லிம்களை ஒதுக்கி வைத்தல் எனும் கொள்கையை கொண்டுள்ளது. அதை அறிவித்தும் உள்ளது. அதனுடைய அரசியலும் ஆட்சி நிர்வாகமும் நச்சுத்தன்மை வாய்ந்த இஸ்லாமிய வெறுப்பை எப்போதுமே உமிழ்ந்து கொண்டிருக்கிறது. பாஜக எப்படி இருக்கிறதோ

அப்படியே அதனை ஏற்றுக் கொள்ளுங்கள்; அதனை தோற்கடிப்பதற்கான, பலவீனப்படுத்துவதற்கான வழிகளை கண்டறிவதை நிறுத்துங்கள் என இந்திய முஸ்லிம்களை மிரட்டுவது, பாஜகவின் இஸ்லாமிய வெறுப்பை நியாயப்படுத்துவதாகவே இருக்கிறது. இந்த தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 24 உறுப்பினர்களும் கூட என்டிஏ அல்லாத 250 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒரு பகுதியாகவே தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். மொத்த நாடாளுமன்ற உறுப்பினர்களில் 10 சதவீதமே உள்ளனர். என்டிஏ விலிருந்து ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கூட முஸ்லீம் அல்ல என்பது குறிப்பிடத் தக்கது. இது பாஜகவின் பிரிவினைவாத இஸ்லாமிய வெறுப்பு அரசியலை, அதன் தாக்கத்தைச் சுட்டிக் காட்டுகிறது.

தேசிய அளவிலும் உள்ளூர் மட்டத்திலும் ஜனநாயகத்திற்காக, நீதிக்காக நடத்தப்படும் போராட்டங்களின் மூலம், சிறுபான்மை மக்களுக்கும் விளிம்பு நிலை மக்களுக்குமிடையே வடிவம் பெறும் வலுவான, பரவலான சகோதரத்துவ பிணைப்பே வெறுப்பு அரசியலுக்கு தக்க பதிலடி கொடுக்க முடியும். இத்தகையதோர் முயற்சியை முஸ்லிம் மக்கள் பின்பற்றி வருகின்றனர். தலித்துகள், பழங்குடியினர், பிற ஒடுக்கப்பட்ட விளிம்பு நிலை மக்கள் ஆகியோரிடமும், தனித்த அடையாளம் கொண்ட சமூகத்தினரிடமும், அத்தகையதொரு ஒருமைப்பாட்டை வளர்த்தெடுப்பதற்கான தேவை யையும் சாத்தியக்கூறையும் 2024 தேர்தல்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

## நாடாளுமன்றத்திலும் அதனை தாண்டியும் ஒன்றுபட்ட அறுதியிடல்

ஒருமைப்பாட்டு உணர்வே மையமானதாகும்; அது உள்ளூர் மட்டத்திலான அல்லது மாநில மட்டத்திலான சமூகக் கூட்டணிகளை கட்டமைப் பதற்கானது மட்டுமல்ல; பரந்த, பல வண்ண கருத்தியல் நீரோட்டங்களையும் மாநில கட்சி களையும் கொண்டுள்ள அகில இந்திய மட்டத்திலான கூட்டணியைப் பேணி வளர்ப்பதற்கும் தான். இந்தியா கூட்டணி இந்த தேவையை நிறைவேற்று வதற்காக பணியாற்றியது. அதனால்தான், இந்தியா கூட்டணி மிக தாமதமாக உருவான போதும், உள்ளூர் அல்லது மாநில அளவில் தேவையான ஒற்றுமை சில மாநிலங்களில் குறைவாக இருந்த போதும், அது மிக அதிக அளவிலான பரந்த மக்களின் ஆதரவையும் தேர்தல் வெற்றியையும் பெற முடிந்தது. தேர்தல் களத்தில் அதிதீவிர தேசியவாத உணர்வெழுச்சியும், இந்துத்துவ வெறித்தனத்தின் செல்வாக்கும் குறைந்து போனவுடன், மூர்க்கமான குஜராத் ஆதரவு குழுவினரால் இயக்கப்படும் அரசு சலுகைசார் முதலாளித்துவ நிறுவனமாக, பாஜகவின் மோடி – ஷா கும்பல் அம்பலப்பட்டு நிற்கிறது.

மதம் வணிகமயமாவது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அந்த மத வணிக மயமாக்கத்தில் குஜராத் கும்பல் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. அரசு சலுகைசார் கார்ப்பரேட் முதலாளிகள் ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள். இதுதான் கோவில்களையும், கோவில் தாழ்வாரங்களையும் மையமாக கொண்டு உருவாக்கப்படும் அரசியல் – பொருளாதார சமன்பாடுகளின் முக்கிய அம்சமாக உதித்திருக்கின்றன.

அதீத மையப்படுத்துதலுக்கு எதிராக, குஜராத் கும்பலின் ஆதிக்கத்துக்கு எதிராக, ஆதரவு குழுவினரின் ஒப்பிட முடியாதளவு ஆதிக்கத்துக்கும், 'இரட்டை எஞ்சின் அரசாங்கங்கள்', 'அதிகபட்ச நிர்வாகம்' எனும் பெயரில் ஏற்படுத்தப்படும் பேரழிவுகளுக்கு எதிராக, உத்தர பிரதேசம் முதல் தமிழ்நாடு வரை, மகாராஷ்டிரா முதல் மணிப்பூர் வரை நாடு முழுவதுமுள்ள, மக்கள் ஒரு வலுவான செய்தியை ஆட்சியாளர்களுக்குச் சொல்லி இருக்கிறார்கள்.

மோடி ஆட்சியை ஒட்டுமொத்தமாக தோற்க டிப்பது, வெளியேற்றுவது என்ற இலக்கை அடைவதில் 2024 தீர்ப்பு சிறிதளவு தவறிவிட்டது என்பது உண்மைதான். ஆனால் அது நிச்சயமாக, பாஜக மோடியின் ஆணவத்தை, ஆட்சியின் மூர்க்கத்தனத்தை பெருமளவில் சிதைத்து விட்டது. ஜனநாயகம் பெருமூச்சுவிடுவதற்கான வெளியைப் பெற்றுள்ளது. உத்தரவாதமான வாழ்வாதாரம், நீதி, அரசமைப்பு சட்டத்தின் ஆட்சி, மதச்சார்பற்ற ஜனநாயகம், அனைவரையும் உள்ளடக்கிய, பன்மைத்துவ இந்தியா ஆகியவற்றை மையமாகக் கொண்டு கட்டமைக்கப்பட்ட தேர்தல் நிகழ்ச்சி நிரல், மக்களின் அடக்கவியலாத துணிச்சல் மற்றும் ஆற்றலின் மூலம் நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும், வீதிகளிலும் வலுப்படுத்தப்பட வேண்டும். கடந்த 70 ஆண்டுகளில் அரசமைப்புச் சட்ட ஜனநாயகம் இந்தியாவில் ஆழமாக வேரூன்றியுள்ளது. இந்திய மக்களாகிய நாம், இந்தியாவில் பாசிசம் வேரூன்றுவதையோ, இந்தியாவை அச்சத்தின் குடியரசாக, வெறுப்பின் குடியரசாக மாற்றுவதையோ ஒருபோதும் அனுமதிக்க முடியாது. ❑

# தொடரும் நச்சு சாராய சாவுகள்; தமிழ்நாடு அரசே பொறுப்பு!

## கள்ளச் சாராயத்தை நோக்கி விரட்டும், டாஸ்மாக் சாராயத்தையும் அரசு உடனடியாகத் தடை செய்ய வேண்டும்.

கள்ளக்குறிச்சி நச்சு சாராயத்தால் இதுவரை 64 பேர் உயிரிழந்துள்ளனர். சாவு எண்ணிக்கை கூடுதலாகும் என்று அஞ்சப்படுகிறது. நூற்றுக்கு மேற்பட்டவர்கள் சேலம், புதுச்சேரி, விழுப்புரம் என பல்வேறு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கருணாபுரம் முழுவதுமே போர்க் களத்து மரணக் காட்சிகளாக உள்ளன. கடந்த ஆண்டு இதுபோல கள்ளச்சாராயத்தால் மரக்காணம் ( விழுப்புரம்) செங்கல்பட்டு பகுதிகளில் 23 பேர் நச்சு சாராயத்தால் இறந்து போயுள்ளனர். அதற்குப் பிறகும் அரசு காட்டியுள்ள அலட்சியமே இப்போது அதைவிடவும் அதிக எண்ணிக்கையில் நிகழ்ந்துள்ள கருணாபுரம் மரணங்களுக்கு காரணமாகும். தமிழ்நாட்டின் மிகப்பெரிய துயரமாக மாறி உள்ளது.

காவல்நிலையம், நீதிமன்றம், வட்டாட்சியர் அலுவலகம் ஆகியவை இருக்கும் இடத்திலிருந்து 150 அடி தூரத்தில் இதுபோன்ற நச்சுச் சாராயம் வெள்ளம் போல் பெருகி ஓடியிருக்கிறதென்றால் அரசுதான் இதற்கு முழுப்பொறுப்பேற்க வேண்டும். கைகட்டி வேடிக்கை பார்த்த ஆட்சியர், காவல் கண்காணிப்பாளர் உள்ளிட்ட சிலர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலும் அரசுதான் இதற்கு முழுப் பொறுப்பேற்க வேண்டும். கல்ராயன் மலையில் கள்ளச்சாராயம் காய்ச்சப்படுவது தொடங்கி விற்பது வரை பெரும் தொழில் சங்கிலி செயல்பட்டு வந்துள்ளது. காவல்துறை, அரசு நிர்வாகம், அரசியல்வாதிகள் என ஒரு விரிவான கூட்டணி செயல்பட்டுள்ளது தெரிகிறது. இந்தப் பெருங்குற்றத்துக்கு காரணமான எவரும் தப்பிக்க விடப்படக் கூடாது. கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். இறந்து போனவர்கள் அனைவரும் ஏழைகள், பெரும்பாலும் பட்டியல் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். தாக்குப் பிடிக்க முடிந்தவர்களுக்கு டாஸ்மாக் சாராயம்; ஏழைகளுக்கு நச்சுசாராயம் என்பதாக தமிழ்நாடு மாறியுள்ளது ஆகப் பெரிய அவலம். அணுஅணுவாகக் கொல்லும் அரசு சாராயத்துக்கும் அதிரடியாகக் கொல்லும் நச்சு சாராயத்துக்கும் தமிழ்நாடு அரசு ஒருசேர முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். சாராயத்தால் தமிழ்நாடு சமூக அநீதி மாநிலமாக மாறுவதை அரசு இனியும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. இறந்தவர்களுக்கு இரங்கல் தெரிவித்த தமிழ்நாடு சட்டப்பேரவை இனிமேல் இது போல் இரங்கல் தெரிவிக்காமலிருக்க சாராயம், போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாட்டை உருவாக்க சட்டமியற்றிட வேண்டும்.

20.06.2024 அன்று, கட்சியின் கள்ளக்குறிச்சி மாவட்டச் செயலாளர் டி. கலியமூர்த்தி, மாவட்டக் கமிட்டி உறுப்பினர்கள் ஆறுமுகம், ஜான் பாட்சா, வல்லமநாதன், கணேசன்,அம்மாசி, ராஜேந்திரன், கடலூர் மாவட்டச் செயலாளர் சி.ராஜசங்கர் உள்ளிட்டோர் நேரில் சென்று பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆறுதல் தெரிவித்து வந்தனர். 26.06.2024 அன்று கட்சி மாநிலச் செயலாளர் பழ.ஆசைத்தம்பி, புரட்சிகர இளைஞர் கழக தலைவர் சுந்தர்ராஜன், பொதுச் செயலாளர் ஜி. தனவேல் உள்ளிட்டோர் மருத்துவமனை, சென்று மேலும் இறப்பு நிகழாமல் இருக்க தீவிர மருத்துவத்தை வலியுறுத்தினர். பாதிப்புக்கு ஆளான கருணாபுரம் குடியிருப்புக்கு சென்று மக்களுக்கு ஆறுதல் தெரிவித்து வந்தனர்.

- ◆முழுமையான மது விலக்கு உடன் அமல்படுத்தப் பட வேண்டும்.
- ◆இறந்தவர் ஒவ்வொருவரது குடும்பத்துக்கும் ரூ. 50 லட்சம் இழப்பீடு, அரசு வேலை வழங்க வேண்டும்; பிள்ளைகளின் கல்விச் செலவை அரசே ஏற்க வேண்டும்.
- ◆பார்வை இழப்பு உள்ளிட்ட உறுப்பு இழந்தவர்களுக்கு ரூ. 25 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும்.
- ◆பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசு வீடு கட்டிக் கொடுக்க வேண்டும். வேலைவாய்ப்புத் திட்டங்களை ஏற்படுத்தித் தர வேண்டும்.
- ◆துயரச் சம்பவத்தின் போது பொறுப்பிலிருந்த ஆட்சியர், காவல் கண்காணிப்பாளர் பிற அதிகாரிகளை பணி நீக்கம் செய்யவேண்டும்;
- ◆கலால் துறை அமைச்சரை பதவிப் பொறுப்பிலிருந்து நீக்க வேண்டும்.
- ◆அரசு அறிவித்துள்ள ஒருநபர் ஆணையம் குற்றக் கும்பலுக்கு துணை நின்ற அரசியல்வாதிகளையும் விசாரணை வளையத்துக்குள் கொண்டு வர வேண்டும்!



# சாதியாதிக்க, ஆணவப் படுகொலைகளைத் தடுக்க, சாதிமறுப்பு, காதல் திருமணத் தம்பதிகளைப் பாதுகாக்க

# தனிச் சட்டம் கட்டாயம் வேண்டும்!

**ஜி.ரமேஷ்**

திருநெல்வேலி பாளையங்கோட்டையைச் சேர்ந்த மதன் குமார் என்ற அருந்ததியர் சமூக இளைஞரும் பெருமாள்புரத்தைச் சேர்ந்த பிற்படுத்தப் பட்ட, வெள்ளாளர் சமுதாயப் பெண் உதய தாட்சாயினியும் 6 ஆண்டுகளாகக் காதலித்து வந்துள்ளனர். அவர்களது திருமணத்திற்கு பெண் வீட்டில் எதிர்ப்பு இருந்த நிலையில், தீண்டாமை ஒழிப்பு முன்னணியை நாடி, சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டனர். திருமணத்தைப் பதிவு செய்யப் போகிறார்கள் என்பதை அறிந்த பெண் வீட்டார் நெல்லை மாவட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில்தான் அவர்கள் ஒளித்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்று சொல்லி 14.6.2024 அன்று பெண்ணின் பெற்றோர், உறவினர் களை அழைத்துக் கொண்டு சாதி வெறி ரவுடிக் கும்பல்கள், அடியாட்கள் சுமார் 30 பேர் வந்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நெல்லை மாவட்டத் தலைமை அலுவலகத்திற்குள் அத்துமீறி புகுந்து அங்கிருந்த கண்ணாடிக் கதவுகள், நாற்காலிகள், மேசைகளையும் சமையலறைக்குள் இருந்த பிரிட்ஜ் உள்ளிட்ட பொருள்களையும் அடித்து நொறுக்கி சூறையாடியுள்ளனர். அங்கிருந்த வர்கள் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தி யுள்ளார்கள். மார்க்சிஸ்ட் கட்சியின் நெல்லை மாவட்டக் குழு உறுப்பினர் வழக்கறிஞர் பழனி மீது அவரைப் பெண் என்றும் பார்க்காமல் மிக மோசமாகத் தாக்குதல் நடத்தியுள்ளார்கள். அதைத் தடுக்க வந்த சிபிஐ(எம்எல்) கட்சியின் நெல்லை மாவட்டச் செயலாளர் சுந்தர்ராஜை கையைப் பிடித்து முறுக்கியுள்ளனர். திராவிடத் தமிழர் கட்சித் தலைவர் களை பார்த்து, உங்க .... பயல்களுக்கு எங்க பொண்ணுதான் கேட்குதோ என்று இழிவாகப் பேசியுள்ளார்கள். அதோடு நிற்காமல் தாக்குதலால் நிலை குலைந்து அமர்ந்திருக்கும் தோழர் பழனி காலில் விழுந்து கதறுவதுபோல் திட்டமிட்டு ஒரு போலி வீடியோவை எடுத்து அதைச் சமூக வலைத் தளங்களில் வெளியிட்டு அவரது நற்பெயருக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் களங்கம் ஏற்படுத்தி னார்கள். அந்தப் பெண் வீட்டாரின் சாதியைச் சேர்ந்தவர்கள் மட்டுமின்றி, பல்வேறு இடை நிலை ஆதிக்க சாதியைச் சேர்ந்த ரவுடிகளும் கூலிப் படையினரும் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர். அசம்பாவிதம் ஏதும் நடக்கலாம் என்று காவல் ஆணையரிடம் முறையிட்டு, இரண்டு காவலர்கள் மார்க்சிஸ்ட் கட்சி அலுவலகத்திற்கு காவல் போடப் பட்டிருந்த நிலையில்தான் அந்தக் காவலர்களின் முன்னிலையில்தான் ரவுடிக் கும்பல்கள் இத்தாக் குதல்களை நடத்தியுள்ளார்கள்.

நன்கு திட்டமிடப்பட்டு நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலின் பின்னணியில் ஆதிக்க சாதி ரவுடிகள் மட்டுமின்றி இந்துத்துவா சக்திகளும் இருந்துள் ளார்கள். இத் தாக்குதலைத் தொடர்ந்து அவர்கள் வெளியிட்ட அறிக்கைகளும் வீடியோக்களும் அதை உறுதிப்படுத்துகின்றன. தென் மாவட்டங்களில் குறிப்பாக, நெல்லை மாவட்டத்தில் பட்டியலின மக்கள் தாக்கப்படுவதும் கொலை செய்யப்படுவதும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. கடந்த ஓராண்டில் மட்டும் 248 பேர் கொல்லப் பட்டுள்ளார்கள். தென் மாவட்ட காவல்துறை ஆதிக்க சாதியினருக்கு ஆதரவாகவே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த திசையன்விளை முத்தையா, நாடார் சமூகப் பெண்ணைக் காதலித்தார் என்பதற்காகக் கொல்லப் பட்டார். அதில் பட்டியல் சாதியைச் சேர்ந்தவர் களையே குற்றவாளிகளாக்கியது காவல் துறை. நான்குநேரி சின்னதுரையும் அவரது சகோதரியும் அவரோடு படித்த இடைநிலைச் சாதியைச் சேர்ந்த சக மாணவர்களால் கொடூரமாக வெட்டப்பட்டார்கள். மணிமூர்த்தீஸ்வரத்தில் மனோஜ் மற்றும் மாரியப்பன் இருவர் மீதும் சிறுநீர் கழித்து கொலைவெறித் தாக்குதல் நடத்தினார்கள் ஆதிக்க சாதி வெறியர்கள். புளியங்குடி தங்கசாமி பாளையங்கோட்டைச் சிறைக்குள் மர்மமான முறையில் மரணமடைந்தார். இந்தக் கொடூரங்களுக்கு எதிராக முதல் குரல் கொடுத்தது, எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தியது கம்யூனிஸ்ட் கட்சிகள். பாதிக்கப் பட்டவர்களுக்கு ஆதரவாக பல்வேறு முற்போக்கு, ஜனநாயக அமைப்புகள் களமிறங்கினார்கள் என்றாலும் முன்னணி பாத்திரம் வகித்தது கம்யூனிஸ்ட் கட்சிகள். இது சனாதன சங்கிகளுக்கும் சாதியாதிக்கக் கும்பல்களுக்கும் ஏன் காவல் துறைக்கும் கூட கடும் ஆத்திரத்தையும் எரிச்ச லையும் ஏற்படுத்தியது. திருநெல்வேலி டவுனில் ஒரு பட்டியலினப் பெண்ணை குத்திக் கொலை செய்த வழக்கில் போராட்டம் நடத்திய மக்களிடம் குறிப்பாக அப்பெண்ணின் பெற்றோர்களிடம் காவல்துறை

கம்யூனிஸ்ட் கட்சியினரை போராட்டத்திற்குள் விட்டுவிடாதீர்கள் என்றே கூறியது. இந்தப் பின்னணியில்தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம் தாக்கப்பட்டதைப் பார்க்க வேண்டும்.

சமூக நீதி காக்க வேண்டிய தமிழக அரசின் காவல் துறை சாதியாதிக்க ரவுடிக் கும்பல்களுக்கு ஆதரவாக நடந்துள்ளது. காதல் திருமணத்தை, சாதி மறுப்புத் திருமணத்தை ஆதரித்த பெரியார், சுயமரியாதைத் திருமணத்தை சட்டப் படியான தாக்கிய அண்ணா, கலைஞர் ஆகியோரின் பெயரில் ஆட்சி நடக்கும் போது சாதி கடந்த காதல் திருமணத்திற்கு எதிராக சாதியாதிக்க வெறியர்கள் தைரியமாக வெளிப்படையாக தாக்குதல் நடத்தியுள்ளனர். இதுவரை இல்லாத வகையில் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்திற்குள்ளேயே வந்து காவல்துறையினரின் முன்பே தாக்குதல் நடத்தி யிருப்பதைப் பார்க்கும் போது சட்டம் ஒழுங்கு காவல்துறையின் கையில் இருக்கிறதா? அல்லது சமூக விரோதிகளின் கையில் இருக்கிறதா? என்கிற கேள்வி எழுகிறது. இந்தத் தாக்குதலைக் கண்டித்து நெல்லையில் மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சி சார்பாக முதல் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப் பட்டது. மார்க்சிஸ்ட் கட்சி அலுவலகத்திற்குள் வந்து தோழர்களைத் தாக்கி, அலுவலகத்தைச் சூறையாடிய கயவர்கள் அனைவரையும் உடனடியாகக் கைது செய்ய வேண்டும், அவர்கள் அனைவர் மீதும் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிய வேண்டும், சாதி வெறியர்களுக்கு ஆதரவாகச் செயல்படும் காவல்துறை அதிகாரிகள், காவல் துறையினர் மீது கடும் நடவடிக்கை எடுத்திட வேண்டும், தமிழ்நாட்டில் சாதி மறுப்புத் திருமணம் செய்பவர்கள் மீதான கொலை வெறித் தாக்குதல்கள், படுகொலைகளைத் தடுக்க, கடுமையான தண்டனை கள் வழங்கும், ஆணவப் படுகொலைகள் தடுப்பு தனிச் சட்டம் இயற்றப்பட வேண்டுமென்ற இடது, முற்போக்கு, ஜனநாயக சக்திகளின் நீண்ட கால கோரிக்கையை,நடப்புச் சட்டப் பேரவைத் தொடரி லேயே சட்டமாக இயற்ற வேண்டுமென திமுக அரசிற்கு கோரிக்கை வைக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் ஆரம்பத்திலேயே வன் கொடுமை தடுப்புச் சட்டம் போடப்படாததால், தாக்குதலில் ஈடுபட்ட பெண்களை ரிமாண்ட் செய்யாமல் பிணையில் விட்டுவிட்டது நீதிமன்றம். நாடு முழுவதும் எதிர்ப்புக்குரல்கள் வந்த பின்னர், சட்டமன்றக் கூட்டத் தொடர் நடக்கவிருக்கும் பின்னணியில்தான் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் வழக்குப் பதியப்பட்டது.

இந்தியா கூட்டணியில் உள்ள கட்சித் தலைவர்களால் சட்டமன்ற உறுப்பினர்களால் தமிழக சட்டமன்றத்தில், கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. ஆனால், அதிர்ச்சியளிக்கும் விதத்தில் தமிழக முதல்வர் ஸ்டாலின், சாதியாதிக்க, ஆணவப்படுகொலைகளைத் தடுப்பதற்காக தனிச் சட்டம் தேவையில்லை, ஏற்கனவே இருக்கக் கூடிய வன்கொடுமைத் தடுப்புச் சட்டமும் இந்திய தண்டனைச் சட்டமுமே போதுமானது, அவற்றைக் கறாராக அமல்படுத்தினால் போதும் என்று கூறினார். அதோடு கோகுல்ராஜ் வழக்கிலும் இன்னும் சில வழக்குகளிலும் அரசு எவ்வாறு விரைவாகச் செயல்பட்டு குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுத் தந்தது என்றும் கூறினார். அவர் அவ்வாறு கூறிய மறுநாளே விருதுநகர் மாவட்டம் கோவிலான் குளத்தில், அருந்ததியர் இளைஞர் அழகேசன், பட்டியலின பள்ளர் சமூகப் பெண்ணை காதல் திருமணம் செய்ய முயன்றார் என்பதற்காக மிகக் கொடூரமாக கழுத்தை தனியாக அறுத்து கொலை செய்யப்பட்டுக் கிடந்தார். பட்டியலின சமூகத்திற் குள்ளே இப்படியொரு கொடூரம் நடந்துள்ளது அதிர்ச்சியளிக்கிறது. சனாதனத்தின், பார்ப்பனி யத்தின் சாதி வெறி மேலிருந்து கீழ் வரை எந்தளவிற்கு ஆழமாக ஊறிப் போய் இருக்கிறது என்பதை இச் சம்பவம் வெளிக்காட்டுகிறது.

காதல் திருமணம் செய்து கொள்பவர்கள் சாதி வெறியர்களால் உடனடியாகவோ அல்லது சில காலம் கழித்தோ கொலை செய்யப்படுவது தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறபோது, அதைத் தடுப்பதற்கான நடவடிக்கையாகத்தான் தனிச் சட்டம் கோரப்படுகிறது. இருக்கிற சட்டத்தினால் எந்தப் பாதுகாப்பும் இல்லை என்பதுதான் எதார்த்தம். முதல்வர் அவர்கள் சொன்னது போல், வேகமான நடவடிக்கை விரைந்து தண்டனை என்பது மிகவும் தேவையானது என்றாலும், வாழ வேண்டியவர்கள் இளம் வயதிலேயே தங்கள் உயிரை இழக்கும் கொடூரத்தை எப்படித் தடுக்கப் போகிறது இந்த அரசு. காதல் திருமணம் செய்பவர்களுக்கு, அவர்களை ஆதரிப்பவர்களுக்கு உயிர்ப் பயத்தை ஏற்படுத்தி, சாதியை வைத்துப் பிழைப்பு நடத்தும் சாதிவெறிக் கயவர்களையும் இந்துத்துவ சக்திகளையும் எப்படிக் கட்டுப் படுத்தப் போகிறது இந்த அரசு? சாதிமறுப்புத் திருமணத்தைக் காலங்காலமாக ஆதரித்து வருவது திமுக அரசு என்று பெருமையுடன் சொல்லிக் கொள்ளும் முதல்வர், அந்தத் திருமணத்தைச் செய்தவர்கள் உயிருடன் இருந்து வாழ்க்கையை வாழ வழி செய்ய வேண்டாமா? இந்துத்துவ சக்திகள் தமிழகத்தில் வளர்ந்து வந்து கொண்டிருக்கும் தற்போதைய நிலையில், இவற்றை ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்தவில்லை என்றால், சமூக நீதி அரசு என்று சொல்வது பொருளற்றுப் போகும். ❑

# மோடி 3.0அரசின் மக்கள் விரோத, மாநில விரோத கொள்கைகளுக்கு எதிராக போராட்டங்களைத் தொடர இககக (மாலெ) முடிவு!

**2024 ஜூன் 22, 23 நாட்களில் கோவையில் நடைபெற்ற கட்சி மாநிலக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**

**2024 மக்கள் தீர்ப்புக்கு வரவேற்பு**

1. 400க்கு மேற்பட்ட தொகுதிகளைப் பெறுவோம் என்று மார்தட்டிய மோடிக்கு இந்திய மக்கள் பாடம் புகட்டியுள்ளனர். வலுவிழந்த மோடி, தலைமையிலான பாஜக, தேசிய ஜனநாயகக் கூட்டணி என்ற பேரால் முட்டு கொடுக்கப்படும் ஆட்சியாக அதிகாரத்துக்கு வந்துள்ளது. இது, நாடு முழுவதும் பாசிசத்திற்கு எதிராக நடத்தப்பட்ட மக்கள் போராட்டங்களுக்குக் கிடைத்த வெற்றியென கூட்டம் பாராட்டியது.

2. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட்) தலைவர்கள் ராஜாராம்சிங், சுதாமா பிரசாத் இருவரையும் பீகாரிலிருந்து வெற்றிபெறச் செய்த உழைக்கும் மக்களுக்கும் மேலும் ஏழு இடதுசாரி உறுப்பினர்களை வெற்றிபெறச் செய்ததோடு தமிழ்நாடு, புதுச்சேரியில் 40 தொகுதிகளிலும் இந்தியா கூட்டணியை வெற்றி பெறச் செய்து மக்களவையில் வலுவான எதிர்க்கட்சி அணியை இடம்பெறச் செய்த மக்களது ஜனநாயக உத்வேகத்தை கூட்டம் பாராட்டியது. தமிழக மக்களது விருப்பங்களை நிறைவேற்றும் வகையில் ஜனநாயகம், மதச்சார்பின்மை, கூட்டாட்சி, அரசமைப்புச் சட்டத்தை பாதுகாக்க தொடர்ந்து போராடவும் கூட்டம் தீர்மானித்தது.

**ஜூலை 1: எதிர்ப்பு நாள்!**

3.மக்களது குடியுரிமை, ஜனநாயக உரிமைகளை பறிக்கும் மூன்று புதிய குற்றவியல் சட்டங்களை ரத்து செய்ய வேண்டும்; பெரும் ஊழல், முறைகேடுகளுக்கு காரணமான நீட் தேர்வு முறையை ரத்து செய்ய வேண்டும், தேசிய ஊரக வேலைத்திட்ட ஒதுக்கீட்டை ஆண்டுக்கு ரூ 2.5 லட்சம் கோடியாக உயர்த்த வேண்டும்; கிராமப்புர, நகர்ப்புர வீட்டு வசதி திட்டத்தில் வீடு ஒன்றுக்கு ரூ 7 லட்சம் நிதி வழங்கிட வேண்டும்; தமிழ்நாட்டையே உலுக்கியுள்ள 59 பேர்களது நச்சு சாராய சாவுக்கு தமிழ்நாடு அரசு பொறுப்பேற்று டாஸ்மாக் மதுக்கடைகளை மூடி முழு மதுவிலக்கு கொண்டு வரவேண்டும்; தமிழ்நாடு முழுவதிலும் பரவியுள்ள கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள் புழக்கத்தை தடுத்து நிறுத்த வேண்டும் என்பவற்றை வலியுறுத்தி ஜூலை 1ல் மாநிலம் தழுவிய எதிர்ப்பு நாள் நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

**சாருமஜூம்தார் நினைவுநாள் மாநில ஊழியர் சிறப்புக் கருத்தரங்கம்**

4. கட்சியின் உறுப்பினர் அடித்தளத்தையும் வெகுமக்கள் செல்வாக்கையும் வலுப்படுத்தவும் கிராமப்புர, நகர்ப் புரங்களில் பெரும் மக்கள் கிளர்ச்சிகளை நடத்தும் வலுமிக்க இடதுசாரி கட்சியாக வளரும் திட்டங்கள் குறித்து கூட்டம் முடிவு செய்தது. இதை நிறைவேற்றும் வகையில் சாருமஜூம்தார் நினைவு நாளான ஜூலை 28 அன்று மதுரையில் மாநில ஊழியர் சிறப்பு கருத்தரங்கை நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

**ஏஅய்சிசிடியு, அவிகிதொச பரப்புரை இயக்கங்கள்:**

5. ஜூலை 10 ஆகஸ்ட் 9 வரை ஏஅய்சிசிடியு பரப்புரை இயக்கம் நடத்த முடிவுசெய்து உள்ளது. தொழிலாளர் சட்டத் திருத்தத்தைத் திரும்பப் பெறுவது, புதிய கிரிமினல் சட்டங்களைத் திரும்பப் பெறுவது, குறைந்த பட்ச ஊதியம் மாதம் ரூ 35,000 அறிவிப்பது, 8 மணி நேர வேலை உள்ளிட்ட பிரச்சனைகள் குறித்து தொழிலாளர் விழிப்புணர்வுப் பரப்புரை இயக்கத்தை வெற்றி பெறச் செய்யுமாறு தமிழக தொழிலாளர் வர்க்கத்துக்கு கூட்டம் அழைப்பு விடுத்தது. அதேபோல, செப்டம்பர் அக்டோபர் மாதங்களில் அவிகிதொச நடத்த உள்ள கிராமப்புர மக்கள் தொடர்பு இயக்கத்தை வெற்றிபெறச் செய்ய வேண்டுமென கூட்டம் அழைப்பு விடுத்தது. கல்வி, வேலை வாய்ப்பு, சமத்துவக் கோரிக்கைகள் மீதான மாணவர், இளைஞர், பெண்கள் அமைப்புகளின் இயக்கத்தை வெற்றிபெறச் செய்வதென்றும் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**சந்துரு ஆணையப் பரிந்துரைகளை சட்டப் பேரவையில் வைக்க வேண்டும்**

6.கல்வி நிறுவனங்களில் சாதி பாகுபாடுகளைக் களைய தமிழ்நாடு அரசால் நியமிக்கப்பட்ட நீதிபதி சந்துரு ஆணைய பரிந்துரைகளை சட்டப்பேரவையில் வைக்க வேண்டும். மேலும் பெரியார்அம்பேத்கர் ஆகியோரது சாதி ஒழிப்புக் கொள்கைகளை கல்வி நிறுவனங்களிலும் சமூகத்திலும் தீவிரமாக பரப்ப, செயல்படுத்த அரசு நடவடிக்கை தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசியல் கட்சிகள் சாதி ஒழிப்பை கொள்கையாக ஏற்றுக் கொள்வதை உறுதி செய்ய வேண்டுமென்று வலியுறுத்தி கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது. சாதிபாகுபாடுகளின் கோட்டைகளாக விளங்கும் கிராமப்புரங்களில் சாதிப்பிளவுகளை ஒழிக்கும் போராட்டங்களைத் தீவிரப்படுத்த இடது, முற்போக்கு, ஜனநாயக இயக்கங்கள் முன்வரவேண்டுமென்றும் கூட்டம் அழைப்பு விடுத்தது.

**விக்ரவாண்டி இடைத்தேர்தலில் இந்தியா கூட்டணிக்கு ஆதரவு**

7. ஜூலை 10ல் நடக்க உள்ள விக்ரவாண்டி இடைத் தேர்தலில் பாஜக–பாமக கூட்டணியைத் தோற்கடிக்கும் வகையில் இந்தியா கூட்டணியின் திமுக வேட்பாளருக்கு ஆதரவு தருவதென்று கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது. தொடர் தோல்வியைத் தவிர்க்கும் பொருட்டு அதிமுக எடுத்துள்ள புறக்கணிப்பு முடிவு பாமகபாஜகவுக்கு ஆதரவானது என்றும் விமர்சித்தது.

இரண்டுநாள் மாநிலக் குழுக் கூட்டத்திற்கு மாநிலச்செயலாளர் பழ. ஆசைத்தம்பி தலைமை தாங்கினார். கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் வீ.சங்கர், மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள் அ.சந்திர மோகன், பாலசுந்தரம் உட்பட பலர் கலந்து கொண்டனர். ❑

*(2024, மே 1–15 இதழின் தொடர்ச்சி)*

# பொதுத்திட்டம் 5

## புரட்சிகர இயக்கப் போக்கு

இந்தியா போன்றதொரு பரந்த, சிக்கல்கள் நிறைந்த நாட்டில், மக்கள் ஜனநாயகப் புரட்சியை நிறைவேற்ற, ஒரு கம்யூனிஸ்ட் கட்சி, இருக்கிற ஒவ்வொரு வேலை அரங்கிலும் வேலை செய்வதிலும், நாடாளுமன்றம் தவிர்த்த, நாடாளுமன்ற போராட்ட வடிவங்களில் வேலை செய்வதிலும், பலதரப்பட்ட வடிவங்களுக்கிடையே ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு துரிதமாக மாறிச் செல்வதிலும், தேர்ச்சியடைவதில் திறனுள்ள ஒன்றாக இருக்க வேண்டும். எனவே, அவசியமான எல்லாப் போராட்ட மற்றும் அமைப்பு வடிவங்களையும், உயிரார்ந்த விதத்தில் இணைப்பதன் மூலம், ஓர் அனைத்தும் தழுவிய புரட்சிகர நடைமுறையை வளர்த்தெடுக்க கட்சி பாடுபடுகிறது.

சாதாரணமான நிலைமைகளில் இந்திய அரசியல் ஆட்சிமுறை கம்யூனிஸ்ட்டுகளை வெளிப் படையான, சட்டபூர்வமான நாடாளுமன்ற வழிமுறைகளில் செயல்பட அனுமதிக்கிறது. கட்சியின் அடிப்படையான அய்க்கிய முன்னணி வழிக்கு பொருந்துகிற, உரிய தேர்தல் செயல் தந்திரங்களை வளர்த்துக் கொண்டே நாடாளுமன்ற அரங்கில் நீண்ட காலத்துக்கு ஒரு புரட்சிகர எதிர்க்கட்சிப் பாத்திரமாற்ற கட்சி தயாராக இருக்க வேண்டும். தேர்தல் போராட்டத்தின் போக்கில் கம்யூனிஸ்ட்டுகள் உள்ளாட்சி அமைப்புகளில், மாநில சட்டமன்றங்களிலும் கூட பெரும்பான்மை பெறமுடியும். நீண்டகால மற்றும் தீவிரமான அரசியல் போராட்டங்கள் மூலமாக, வர்க்க சக்திகளின் சமநிலையில் ஒரு சாய்வு ஏற்படுத்தும் அதேநேரம், வாக்காளர்களுக்கு தந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதை உறுதிபடுத்தும் அளவுக்கு கட்சி, வலிமை உள்ளதாக இருக்கும்போது, இது போன்ற வாய்ப்புகளை சுதந்திரமாகவோ அல்லது ஒத்த கருத்துடைய சக்திகளுடன் கூட்டுச் சேர்ந்தோ, பயன்படுத்திக் கொள்ளவும் தயாராக இருக்கிறது.

எப்படியிருப்பினும், இது போன்ற உள்ளாட்சி அமைப்புகளோடும்/ அரசாங்கங்களோடும், கட்சி கொண்டிருக்கும் உறவும் பாத்திரமும் பின்வரும் அடிப்படைக் கோட்பாடுகளால் வழிநடத்தப்படும்.

அ. எந்தச் சூழ்நிலையிலும், கட்சி சுதந்திரமான அமைப்புச் செயல்பாட்டையும் அரசியல் முன்முயற்சியையும் தக்க வைத்துக் கொண்டாக வேண்டும்.

ஆ. உள்ளாட்சி அமைப்புகள்/அரசாங்கங்கள் கொண்டுள்ள அதிகாரம், தீவிரமான ஜனநாயக சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கும், ஒரு புதிய ஜனநாயக மாற்றை உருவாக்குவதை நோக்கி, மக்கள் உணர்வைத் திசைவழிப்படுத்துவதற்கும், முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளப்பட வேண்டும்.

இ. இது போன்ற உள்ளாட்சி அமைப்புகள்\ அதிகாரங்கள், மய்ய அதிகாரம் வரையிலான அடுத்தடுத்த உயர்நிலை கட்ட அதிகாரங்களுடன், பரந்ததொரு புரட்சிகர எதிரணியின், பிரிக்க முடியாத அங்கமாக செயல்பட வேண்டும்.

ஈ. கட்சியும் அதனால் தலைமை தாங்கப்படும் உள்ளாட்சி அமைப்புகளும் அரசாங்கங்களும் எந்தச் சூழ்நிலையிலும் ஜனநாயக சக்திகளின், ஜனநாயக உணர்வின், ஜனநாயக இயக்கங்களின் சுதந்திரமான வளர்ச்சி, தடைபடாமல் இருப்பதை உறுதிசெய்தாக வேண்டும்.

இந்தியாவின் காலனிய எதிர்ப்புப் போராட்டம், கம்யூனிச இயக்கம் மற்றும் வளர்ந்து வரும் பெரும்தொழில் குழும எதிர்ப்புப் போராட்டம் ஆகியவற்றின் வரலாற்றில், வேர்க்கால் மட்டங் களில் பல்வேறு வகை மக்கள் கமிட்டிகள், தொழிற் சாலைகள்/ தொழிலாளர் குடியிருப்புக்களில், தொழிலாளர்/ குடிமக்கள் கவுன்சில்கள் முதல் மக்கள் தன்னாட்சியின் வெவ்வேறு வடிவங்களில் அளவுகளில், மக்கள் அதிகாரம், அவை குறுகிய காலமே இருந்தவை என்றாலும், உருப்பெற்று எழுந்த நிகழ்வுகள் பல உண்டு. மக்களது நலன்கள், உரிமைகளைக் காப்பதற்கான வெகுமக்கள் போராட்டங்களின் போக்கில், அதுபோன்ற உள்ளூர் அதிகாரங்கள் எழுகிற சாத்தியப்பாட்டை அடையவும் ஊக்கப்படுத்தவும் கட்சி பாடுபடுகிறது. விதிவிலக்கான தேசிய, சர்வதேசிய சூழல்களில்

உதாரணமாய் ஒரு தீர்மானகரமான வெகுமக்கள் எழுச்சி நிலைமைகளில் சமூக, அரசியல் சக்திகளின் சமநிலை, ஒப்பீட்டுரீதியில், அமைதியான வழியில், புரட்சிகர சக்திகளிடம், மய்ய அதிகாரம் மாற்றப்படுவதைக் கூட அனுமதிக்கும் சாத்தியப் பாட்டை கட்சி ஒதுக்கித் தள்ளி விடவில்லை. ஆனால், ஜனநாயக நிறுவனங்கள் சாராம்சத்தில் நொறுங்கிவிடக் கூடிய, குறுகிய அடித்தளங்களைக் கொண்டுள்ள ஒரு நாட்டில், வெகுமக்கள் சக்திகளின் சிறிய வெற்றிகளை, பகுதியளவு சீர்திருத்தங்களை அடைவதற்கும் அவற்றை பாதுகாப்பதற்கும் கூட, வெகுமக்களது போர்க்குணத்தின் பலம் தேவைப்படுகிற ஒரு நாட்டில், பாட்டாளி வர்க்கக் கட்சி, அனைத்து சாத்தியமான எதிர்ப்புரட்சித் தாக்குதல்கள் முன்னிலையிலும், இறுதியில் தீர்மானகரமான வெற்றியை அடைவது, தக்க வைப்பது என்பதன் மூலம் புரட்சியை நிறைவேற்ற தன்னை முழுமையாக தயார்படுத்திக் கொள்ள வேண்டும். எனவே, கட்சியின் ஆயுதக் கிடங்கில், ஒரு மக்கள் ஜனநாயக முன்னணியும், ஒரு மக்கள் ராணுவமும் புரட்சியின் இரண்டு மிகுந்த அடிப்படையான உறுப்புகளாக இருக்கும்.

### மக்கள் ஜனநாயக அரசு

பெருமுதலாளித்துவநிலப்பிரபுத்துவக் கூட்டின் ஆட்சியை தூக்கியெறியும் வெற்றிகரமான புரட்சி, தொழிலாளர்கள், விவசாயிகள், இதர புரட்சிகர வர்க்கங்கள் ஜனநாயகப் பிரிவினரின் ஓர் ஆட்சியை, அதாவது, மக்கள் ஜனநாயக அரசைக் கொண்டு வரும். அந்த அரசு பின்வரும் அடிப்படைக் கடமை களை நிறைவேற்றும்; சோசலிச உள்ளாற்றலை முன்னெடுக்கும் புதிய ஜனநாயக திசைவழியை உயர்த்திப் பிடிக்கும்.

1. அரசின் கட்டமைப்பை, நடவடிக்கைகளை முற்றூடாக ஜனநாயகப்படுத்துவது:

அ. (வயது வந்த) அனைவருக்குமான, சமமான, நேரடியான, வாக்குரிமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் அமைப்புகளின் ஒவ்வொரு மட்டத்திற்கும், அரசியல் அதிகார உரிமை அளிக்கப்படும். நிர்வாக வலைப்பின்னல், வெகுமக்கள் மேற்பார்வைக்கும், கட்டுப்பாட்டுக்கும் உட்படுத்தப்படும்.

ஆ. பொறுப்பை நிறைவேற்றுவதை உறுதி செய்ய, அதிகாரம் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்க, தேர்ந்தெடுக்கப்பட்டப் பிரதிநிதிகளையும், குடிமைச் சேவை அதிகாரிகளையும் திரும்ப அழைக்கும் உரிமையுடன் மக்கள் அதிகாரம் கொண்டிருப்பார்கள்.

இ. மக்கள், பல்வேறு ஜனநாயக கட்சிகள், அமைப்புகளின், முழுமையான, தனிப்பட்ட, கூட்டு ஜனநாயக உரிமைகள், உறுதிப்படுத்தப்படும்.

ஈ. அரசு பயங்கரவாதம், காவல்துறை காட்டுமிராண்டித்தனம், மக்களது குடிமை விசயங்களில் ராணுவத்தின் தலையீடு என்ற வழிமரபு ஒழித்துக் கட்டப்படும். காவல்துறையும், ஆயுதப்படைகளும் மறுகட்டமைப்பு செய்யப்படும். மானுட உரிமைகளுக்கு மதிப்பளிப்பது மக்களுக்கும் தேசத்திற்கும் சேவை செய்வது என்ற ஒரு புதிய உணர்வு அவற்றுக்கு ஊட்டப்படும்.

உ. அரசியல், பொருளாதார, வாழ்வின் அனைத்து தளங்களிலும் உள்ள குற்றமயமும், ஊழலும் ஒழித்துக்கட்டப்படும். துரிதமான, முற்போக்கான, நீதி வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்படும்.

2. எதேச்சதிகார முறையில் மேலிருந்து திணிக்கப்படுவதற்கு எதிராக, கீழிருந்து மறுகட்டமைப்பு செய்யப்படும் தேச ஒற்றுமை; கூட்டாட்சி, ஜனநாயக, மதச்சார்பற்ற ஆட்சி அமைப்பு முறை அடிப்படையில் இருக்கும்:

அ. எல்லா தேசிய, மதச் சிறுபான்மையினரிடையே உள்ள, எல்லா சிறுபான்மை குழுக்களிடத்தும் உரிமையுணர்வு, சமத்துவம், பாதுகாப்பு உணர்வினை வளர்த்தெடுக்கும் அதேவேளை, தேசிய இனங்களின் விருப்பங்களும், பிரிந்து போகும் உரிமை வரையிலான, வெவ்வேறு அளவுகளிலான சுயநிர்ணய உரிமைக்கு மதிப்பளிக்கப்படும், அங்கீகரிக்கப்படும்.

ஆ. பின்தங்கிய பகுதிகளுக்குரிய அழுத்தத்துடன் கூடிய, தேசகட்டுமானத்தில், வெகுமக்களின் பரந்த பங்கெடுப்பை உறுதிபடுத்துகிற, வளர்ச்சி நடவடிக்கைகள் பரவல்படுத்தப்படுகிற, மூல வளங்கள் பிரித்தளிக்கப்படுகிற, முடிவெடுக்கும் முறை செயல்மிக்க வகையில் ஜனநாயகப் படுத்தப்படும்.

3. துரிதமான, தன்னிறைவான, நீடிக்கத்தக்க, சமச்சீரான, பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதும், வெகுமக்கள் வறுமை ஒழிப்பும்:

அ. முழுமையான நிலச்சீர்திருத்தம் மற்றும் விவசாயத்திற்கு அனைத்தும் தழுவிய அரசு உதவி மூலம், வலுவான, ஆரோக்கியமான, விவசாய வளர்ச்சி ஏற்படுத்தப்படும்.

ஆ. விவசாய நிலம் பாதுகாக்கப்படும். அனைத்து

கனிம வளங்கள், எண்ணெய், எரிவாயு தேசிய மயமாக்கப்படும்.

இ. நாட்டின் இயற்கை, மனித வளங்களை நியாயமான முறையில் பயன்படுத்தி அனைத்தும் தழுவிய தொழில்மயமாக்கம் ஏற்படுத்தப்படும்.

ஈ. சிறிய, நடுத்தர நிறுவனங்களை முன்னேற்றுவது, அவற்றுக்கு நிறுவனக் கடன், சந்தை வசதிகள் ஏற்படுத்திக்கொடுத்து உதவுதல், கைத்தொழில்கள் மற்றும் சுதேசிப் பொருட்களை முன்னெடுக்க உதவுவது அவை கூட்டுறவு அமைப்புகளாக உருவாக உதவுவது.

உ. நாட்டின் வளரும் எரிசக்தித் தேவைகள் தன்னிறைவான வழிமுறைகளில் அடையப்படும்; அந்நிய ஆதாரங்கள் மீதான சார்பு குறைக்கப்படும். அணு ஆற்றல், பெரிய அணைகள் போன்ற ஆபத்தான தேர்வுகள் தவிர்க்கப்படும். எரிசக்தி உற்பத்தியில் மாற்று மற்றும் புதுப்பிக்கத்தக்க வழிமுறைகள் முன்னேற்றப்படும்.

ஊ. தேசப் பொருளாதாரத்தின் கடிவாளங்கள் ஏகபோகபன்னாட்டுகுற்றக்கும்பல் நிலப்பிரபுகுலக் அச்சின் கைகளிலிருந்து அரசு மற்றும் பல்வேறு மக்கள் அமைப்புகளுக்கு மாற்றப்படும். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருக்கும் கருப்புப் பணமும், சட்டவிரோதமான செல்வமும் பறிமுதல் செய்யப்படும்.

எ. சாமான்ய மக்களின் வாங்கும் சக்தியை வளர்ப்பது, விவசாய விளைபொருட்களில் பிரம்மாண்டமான அரசுக் கொள்முதலை உறுதி செய்வது, அனைவருக்கும் அடிப்படை பொருட்கள், சேவைகள் வழங்குவது ஆகியவற்றின் மூலம் சக்திவாய்ந்த உள்நாட்டு சந்தை உருவாக்கப்படும்.

ஏ. கொள்கை உருவாக்கம், உற்பத்தி ஆகியவற்றில், உழைக்கும் மக்களுக்கு திறன் மிக்க பாத்திரம் வழங்கப்படும்; உயர்திறன் கொண்டவர்களுக்கு போதுமான உள்நாட்டு வாய்ப்புகள் உருவாக்கித் தருவதன் மூலமும், உள்நாட்டு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியை முன்னேற்றுவதன் மூலமும் இந்திய அறிவு வெளியேறுவது தடுக்கப்படும்.

ஐ. தன்னிறைவு, பொதுமக்கள் நலன், ஓர் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தோடு, உழைக்கும் மக்கள் ஒரு கவுரவமான வாழ்க்கையைப் பெறுவது ஆகியவற்றின் தேவைகளுக்குப் பொருந்துகிற வகையில் தற்போதைய முன்னுரிமைகள், மறு ஒழுங்கு செய்யப்படும். நடப்பிலுள்ள கொள்கைகள் மறுதிசை வழிப்படுத்தப்படும்.

ஒ. ஒப்பந்த முறையை ஒழிப்பது, ரகசிய வாக்கெடுப்பின் மூலம் முழுமையான தொழிற்சங்க உரிமைகளை உறுதி செய்வது, கூட்டுபேர மற்றும் வேலை நிறுத்த உரிமைகளை பாதுகாப்பது, எல்லா தொழிலாளருக்கும் வாழ்வதற்கான ஊதியம் நிர்ணயம் செய்வது, அதை உறுதி செய்வது, மாற்றுத் திறனாளிகள், ஓய்வு பெற்ற தொழிலாளருக்கும் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதி செய்வது, சமவேலைக்கு சம ஊதியம் கோட்பாட்டை கறாராக அமல்படுத்துவது, சிறுவர் உழைப்பை ஒழிப்பது, திறன்வாய்ந்த விதத்தில் வேலை நேரத்தை தொடர்ந்து குறைப்பது போன்றவை மூலம் தொழிலாளர் வர்க்க நிலைமைகளைத் தீவிரமாக முன்னேற்றுவது.

4. விரிவான அடிப்படை வசதிகளை, நல்வாழ்வை உறுதிப்படுத்துவது:

அ. பொதுமக்கள் வசதிகளில் தனியார்மயம், வர்த்தகமயத்துக்கு முடிவு கட்டப்படும். அனைவருக்கும் உணவு உரிமை, எல்லா மட்டங் களிலும் தரமான, கட்டணமில்லாத கல்வி உரிமை, வேலை உரிமை, கட்டணமில்லாத தரமான மருத்துவப் பாதுகாப்பு உரிமை, குடிநீர், வீட்டுவசதி, சுகாதாரம், பொதுப் போக்குவரத்து, விளையாட்டு, பொழுது போக்கு போன்ற அடிப்படை வசதிகளுக்கான உரிமை; எல்லாக் குழந்தைகளுக்கு மான பாதுகாப்பு; முதியோர், மாற்றுத் திறனாளிகள், துயருற்றோருக்கான பாதுகாப்பு ஆகியவை உறுதி செய்யப்படும்; உரிமைகள் பறிகொடுத்த, நலிந்த பிரிவினருக்கு திறன்வாய்ந்த சமூக நீதியை உறுதி செய்ய, போதுமான பயிற்சியும் வாய்ப்புகளும் வழங்கப்படும்.

ஆ. உயிரினச் சூழல், சுற்றுப்புறச் சூழல் சமநிலை பாதுகாக்கப்படும். கொள்ளை நோய்கள், தொற்று நோய்கள் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்படும். இயற்கைப் பேரிடர்கள், காலநிலை மாற்றத்தின் பேரழிவுமிக்க தாக்கம் ஆகியவற்றை தடுக்க, குறைக்க, நிர்வகிக்க, திறன்வாய்ந்த திட்டங்களும் வழிமுறைகளும் கொண்டு வரப்படும்.

இ. மக்களை வெளியேற்றுவதன் மூலம் 'வளர்ச்சி' என்ற வறட்டுக் கருத்து கைவிடப்படும். பெருநிறுவனங்களால் வழிநடத்தப்பட்ட 'வளர்ச்சி' போர்த்தந்திரத்தால் அகதிகளாக்கப்பட்டவர்கள் திறன்வாய்ந்த விதத்தில் மறுவாழ்வு, மறுகுடியிருப்பு பெறுதல் உறுதி செய்யப்படும். பழங்குடியினர், காடுகளில் வாழ்வோரின் மரபார்ந்த காடுகள் மீதான

உரிமைகளும், வாழ்வாதார உரிமைகளும் உறுதி செய்யப்படும்.

5. ஒட்டுமொத்த சமூகத்திலும், ஒரு நவீன ஜனநாயக கலாச்சார மாற்றம் கொண்டு வரப்படும்:

அ. சீரழிந்த நிலப்பிரபுத்துவ ஏகாதிபத்திய கலாச்சாரத்தினிடத்தில் ஒரு ஜனநாயக முற்போக்கு சமூக கலாச்சாரச் சூழல் முன்னெடுக்கப்படும். அனைத்து நவீன கலாச்சார வடிவங்களையும் பிரிவுகளையும் முன்னேற்றும் அதே நேரம், நம் மக்களது செழுமையான கலாச்சார பாரம்பரியம் ஊக்கப்படுத்தப்படும்.

ஆ. இந்திய இளைஞர்களின் பிரம்மாண்டமான, வெளிக் கொண்டு வரப்படாத உள்ளாற்றலை முன்னேற்ற, சர்வதேச விளையாட்டு மற்றும் ஆட்டங்கள் அரங்கில் இந்தியாவின் செயல்பாட்டை மேம்படுத்த, போதுமான விளையாட்டு உள்கட்டுமான, பயிற்சி வசதிகள் உருவாக்கப்படும்.

இ. பெண்கள் மீதான எல்லாவித சமூக, பொருளாதார, பாலியல் சுரண்டல் ஒழித்துக் கட்டப்படும். வாழ்க்கையின் எல்லா அரங்குகளிலும், பெண்களின் சம அந்தஸ்தும் உரிமைகளும் உத்தரவாதப் படுத்தப்படும். சாதிய பாகுபாடு, சாதிய ஒடுக்குமுறை ஒழிக்கப்படும். பல்வேறு சிறுபான்மை சமூகங்களின், ஆதிவாசிகளின், உரிமைகள் பாதுகாக்கப்படும். சமூகத்தின் எல்லா நலிந்த பிரிவினரும், சமூக முன்னேற்றத்துக்கான ஓட்டத்தில் இணைந்து கொள்ளும் வகையில் உதவிடும். அவர்களது, சம அந்தஸ்து உறுதி செய்யப்படும்.

6. ஒரு முற்போக்கான ஏகாதிபத்திய எதிர்ப்பு அயல்விவகார கொள்கை முன்னெடுக்கப்படும்:

அ. ஏகாதிபத்தியங்களுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள அனைத்து சமனற்ற ஒப்பந்தங்களும், உடன்படிக் கைகளும் ரத்து செய்யப்படும். அதே போல், அண்டை நாடுகள் மீது, இந்திய ஆளும் வர்க்கங்கள் திணித்துள்ள, சமனற்ற ஒப்பந்தங்களும் ரத்து செய்யப்படும்;

ஆ. சோசலிச நாடுகளுடனும், ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் முற்போக்கு ஆட்சிகளோடும் உறுதிமிக்க ஒற்றுமை வளர்த்தெடுக்கப்படும். பொதுவாக வளரும் நாடுகளுடன் நட்புறவு பேணப்படும். விடுதலைக்காகவும் ஏகாதிபத்திய உலகமயம், ஆதிக்கம் மற்றும் போருக்கெதிராகவும், அது ஏகாதிபத்திய போராக இருந்தாலும் அல்லது ஏகாதிபத்தியம் தூண்டிவிடும் நிழல் போராக இருந்தாலும், போராடும் மக்களோடு, ஒருமைப்பாட்டை வளர்த்தெடுக்கவும், ஏகாதிபத்தியத்துக்கு எதிராக தெற்காசிய ஒருமைப்பாட்டை வளர்த்தெடுக்கவும், சிறப்பு அழுத்தம் வைக்கப்படும்;

இ. அனைத்து நாடுகளுடனும் சமாதான சகவாழ்வுக்கான, அய்ந்து கோட்பாடுகள் அடிப் படையில் ராஜதந்திர உறவுகள் நிறுவப்படும்.

மக்கள் ஜனநாயகப் புரட்சிக்கான இந்தத் திட்டத்துடன் இந்தியாவில், கம்யூனிசத்தைக் கொண்டுவரும் மாபெரும் புரட்சிகர நோக்கத்திற்கு பாடுபட, கட்சி தன்னை முழுமனதாக அர்ப் பணித்துக் கொள்கிறது. 21ம் நூற்றாண்டு இந்தியாவின் மக்கள், அனைத்தும் தழுவிய, முழுமையான ஜனநாயகத்தை, உண்மையான சமூக, பால், சுற்றுச்சூழல், பொருளாதார நீதியை வென்றாக வேண்டும். *(பொதுத் திட்டம் முடிவுற்றது)*

# ஏஐசிசிடியு தலைவர்கள் மீதான தாக்குதலைக் கண்டிக்கிறோம்

**இராணிப்பேட்டை, சோளிங்கரில் உள்ள டிவிஎஸ் குரூப், பிரேக்ஸ் இந்தியா நிறுவனத்தில் பவுண்டரி டிவிஷனில் பணிபுரிந்த 50க்கும் மேற்பட்ட தொழிலாளர்களை நிர்வாகம் சட்டவிரோதமாக 03.06.2024 அன்று பணிநீக்கம் செய்ததை கண்டித்து தொடர் போராட்டம், 26 நாளாக ஏஐசிசிடியு தலைமையில் நடைபெற்று வருகிறது. இந்நிலையில், கடந்த சில நாட்களுக்கு முன்னர், டிவிஎஸ் நிர்வாகம், சமூக விரோத ரவுடிகளை வைத்து ஏஐசிசிடியு மாநில சிறப்புத் தலைவர் தோழர் இரணியப்பன், மாவட்டத் தலைவர் சிம்புதேவன் ஆகியோர் மீது கொலை வெறித் தாக்குதல் நடத்தியுள்ளது.**

**இந்தத் தாக்குதலைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் 29.6.2024 அன்று கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. இராணிப்பேட்டை, முத்துக்கடையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில், சிபிஐஎம்எல் மாநில செயலாளர் ஆசைத்தம்பி, ஏஐசிசிடியு மாநில சிறப்பு தலைவர் தோழர் இரணியப்பன், கட்டுமான சங்க மாநிலத் தலைவர் அந்தோணிமுத்து, ஏஐசிசிடியு மாநில நிர்வாகிகள் பாலசுப்பிரமணியன், வழக்கறிஞர் அதியமான், கோவிந்தராஜ் உள்ளிட்ட பலர் கண்டன உரையாற்றினார்கள்.**

## விவசாயிகள் விரோத கார்ப்பரேட் ஆதரவுப் பாதையில் மோடி 3.0 அரசாங்கமும் செல்கிறது!

அ.சந்திரமோகன்

### விவசாயிகளை கொன்றவருக்கு விவசாய அமைச்சர் பதவி:

புதிதாக மத்தியில் பதவியேற்றுள்ள தேசிய சனநாயக கூட்டணி அரசாங்கம், மண்ட்சோர் விவசாயிகளின் ரத்தக்கறை படிந்துள்ள சிவராஜ் சிங் சவுகானை மத்திய விவசாய அமைச்சர் ஆக்கியுள்ளது. அவர், மத்திய பிரதேச முதல்வராக இருந்த போதுதான் 2017ம் ஆண்டு ஜூன் 6 அன்று மத்திய பிரதேசத்தில் மண்ட்சோர் போராட்டக் களத்தில் காவல்துறையால் விவசாயிகள் கொல்லப்பட்டனர்.

தற்போது செயல்பட்டு வரும் எஸ்கேம் ஐக்கிய விவசாயிகள் முன்னணி தோன்றுவதற்கு முன்பு, நாடு முழுவதுமுள்ள போராடும் விவசாய சங்கங்களின் மேடையாகத் திகழ்ந்த AIKSCC அகில இந்திய விவசாயிகள் போராட்ட ஒருங்கிணைப்புக் குழு வேளாண் விளைபொருள்களுக்கு சி2+50% என்ற அடிப்படையில் குறைந்தபட்ச ஆதார விலை, விரிவான கடன் தள்ளுபடி ஆகியவற்றிற்காகவும் மற்றும் அதிகரித்து வரும் விவசாயிகளின் தற்கொலை போக்கை தடுக்க திறன்மிக்க அரசாங்க நடவடிக்கைகளை வலியுறுத்தியும் தொடர் போராட்ட இயக்கம் கட்டமைத்து வந்தது. அதன் ஒரு பகுதியாக மத்திய பிரதேசம், மாண்ட்சோரில் போராடிய விவசாயிகள் மீது தடியடி, துப்பாக்கி சூடு நடத்தப்பட்டு ஆறு விவசாயிகள் படுகொலை செய்யப்பட்டனர். இது நாடு முழுவதும் விவசாயிகள் மத்தியில் கொந்தளிப்பை உருவாக்கியது.

அந்த விவசாயிகளின் ரத்தக்கறை படிந்த சிவராஜ் சிங் சவுகானுக்கு மத்திய விவசாய அமைச்சர் பதவி தரப்பட்டுள்ளது. மோடி 3.0 அரசாங்கத்தின் இந்த முடிவு, அறுதிப் பெரும்பான்மையுடன் இருந்த முந்தைய பாஜக ஆட்சிகளின் அதே ஆணவத்தையும், கார்ப்பரேட் ஆதரவு பயணத்தையும் வெளிப்படுத்துகிறது. பாஜக மட்டும் தனியாக இழந்த 63 இடங்களில் 60 இடங்கள் உள்ளிட்ட மொத்தம் 159 கிராமப்புற மக்களவைத் தொகுதிகளில் ஏற்பட்ட தோல்வியிலிருந்து தேசிய ஜனநாயகக் கூட்டணியும் பாஜகவும் பாடம் கற்கவில்லை என்பதையே இது காட்டுகிறது.

### மோடி 3.0 அரசாங்கத்தின் பம்மாத்து:

தேசிய சனநாயக கூட்டணி அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தில் பரபரப்புடன் அறிவிக்கப்பட்ட "விவசாயிகளுக்கு ரூ.20,000 கோடி வழங்கப்படும்! " என்ற அறிவிப்பு, பிரதம மந்திரி கிசான் சம்மன் நிதியில் நிலுவையில் உள்ள 20,000 கோடி ரூபாய் என்பதே ஆகும். இது விவசாயிகளின் குடும்பத்திற்கு மாதம் ஒன்றுக்கு சராசரியாக ரூ.500 என்ற போதுமானதற்ற தொகையுடன் ஏற்கனவே நடைமுறையில் உள்ள திட்டமாகும். இது விவசாயிகளை ஏமாற்றும் அறிவிப்பாகும்; இது, விவசாயிகளுக்கு குறைந்த பட்ச ஆதரவு விலையான சி2+50% யை கொடுக்காமல் ஏமாற்றவும், விவசாயத் துறையை கார்ப்பரேட் கையகப்படுத்தும் கொள்கைகளை மறைப்பதற்கு மான மோசடி நாடகமும் ஆகும். தேசிய சனநாயக முன்னணி அரசாங்க முதல் அமைச்சரவைக் கூட்டம், கடுமையான விவசாய நெருக்கடி மற்றும் விவசாயிகளின் தற்கொலை (இந்தியா முழுவதும் தினசரி 31 விவசாயிகள் தற்கொலை செய்துகொள்கிறார்கள்), நீண்டகாலமாக நிலுவையில் உள்ள விவசாயிகளின் கோரிக்கையான சி2+50% அடிப்படையிலான குறைந்தபட்ச ஆதாரவிலை விஷிறி, கடன் தள்ளுபடி, மின்சாரத்தை தனியார்மயமாக்குவதை ரத்து செய்தல், உற்பத்திச் செலவைக் குறைத்தல் மற்றும் பயிர் காப்பீடு மற்றும் விவசாயிகளுக்கான ஓய்வூதியம் உறுதி செய்தல் போன்ற விரிவான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு எந்த முடிவும் எடுக்கவில்லை.

### போராட்டங்களுக்கு விவசாயிகள் தயாராக வேண்டும் !:

இந்திய விவசாயத்தில், மோடி அரசாங்கம் அமல்படுத்தி வரும் கார்ப்பரேட் கொள்கைகளில் மாற்றம் ஏற்படும் என்ற மாயை விவசாயிகள் மத்தியில் இல்லை. தேர்தலுக்குப் பிந்தைய சூழ்நிலையை மதிப்பிடுவதற்காகவும், கார்ப்பரேட் தாக்குதலில் இருந்து விவசாயத்தைக் காப்பாற்றவும், மோடி அரசின் கொள்கைகளில் மாற்றத்தை வற்புறுத்தும் போராட்டத்துக்குப் புத்துயிர் அளிக்கவும் செயல்திட்டத்தை ஆலோசிக்கவும், தனது பொதுக்குழுவை ஜூலை 10 ல் புது தில்லியில் நடத்த எஸ்கேஎம் ஐக்கிய விவசாயிகள் முன்னணி திட்டமிட்டுள்ளது; அதேபோல, நமது AIKM அகில இந்திய விவசாயிகள் மகாசபை தனது தேசிய கவுன்சில் கூட்டத்தை ஆகஸ்டு 3, 4 தேதிகளில் பஞ்சாப் மாநிலம் மான்சாவில் கூட்டுகிறது. தொழிலாளர்கள், சிறு வணிகர்கள் ஆகியோருடன் இணைந்து, நாடுமுழுவதும் விரிவடைந்த, துடிப்பான போராட்டங்களை கட்டமைக்க இந்திய விவசாயிகள் தயாராக வேண்டும். ❑

# நீதிபதி சந்துரு ஆணைய பரிந்துரைகள் சட்டப் பேரவையில் வைக்கப்பட வேண்டும்

–சி.மதிவாணன்

திருநெல்வேலி மாவட்டம் நான்குனேரியில் 2023 ஆகஸ்ட் 9 அன்றுபட்டியல் சமூக மாணவர் சின்னதுரையும் அவரின் சகோதரியும் இடைநிலைச் சாதியைச் சேர்ந்த, சக மாணவர்களால் வெட்டப் பட்டார்கள். சின்னதுரை தன்னோடு பள்ளியில் படிக்கும் இடைநிலைச் சாதியைச் சேர்ந்த மாணவர்கள் விடுத்த ஏவல் பணிகளைச் செய்ய மறுத்தும் அது பற்றி பள்ளியில் புகார் அளிக்கப் பட்டதுதான் தாக்குதலுக்கான காரணம். 'ஏவல் பணிகளைச் செய்வது அடிமைகளின் அடையாளம், ஏவுவது எஜமானர்களின் சுபாவம்' என்பது சமூகத்தில் ஊறியிருக்கும் மூடத்தனம்.

இத்தாக்குதலைக் கண்டித்து தமிழ்நாட்டில் வலுவான குரல்கள் எழுந்தன. அதைத் தொடர்ந்து தமிழ்நாடு பள்ளிகளில் நிலவும் சாதிய வேறுபாடுகள் குறித்து ஆய்வு செய்து, அதற்கு தீர்வு காண்பதற்காக நீதிபதி சந்துரு தலைமையிலான ஒரு நபர் ஆணையம் ஒன்றை ஆகஸ்ட் 2023ல் தமிழ்நாடு அரசு அமைத்தது. பல மாவட்டங்களுக்கும் நேரில் சென்று ஆய்வு செய்த நீதிபதி சந்துரு, பாதிக்கப்பட்டவர்களையும் பிறரையும் சந்தித்தார். தனது அறிக்கையை 2024 ஜூன் 18 அன்று தமிழ்நாடு முதலமைச்சரிடம் அளித்தார். உடனே, 'அறிக்கை இந்துக்களுக்கு எதிரானது. அதனை முழுமையாக புறக்கணிக்கப்பட வேண்டும்', 'நெற்றியில் பொட்டு வைப்பதை யார் எதிர்க்க முடியும்?' என்று பாஜகவின் எச்.ராஜா பொங்கியெழுந்தார். இந்துக்களுக்கு எதிரான இந்தப் பரிந்துரைகளை தமிழக அரசு ஏற்கக் கூடாது என்றார் அண்ணாமலை. பள்ளிகளில் சாதி ஆதிக்க வெறி பரவுவதைத் தடுப்பதற்கான பரிந்துரைகளை பாஜக எதிர்ப்பது அவர்களின் இந்துத்துவ அரசியலுக்கு ஆபத்து வந்து விடுமே என்றுதான்.

கல்வி நிலையங்களில் சாதி ரீதியிலான பாகுபாடுகளையும் வன்முறைகளையும் தடுப்ப தற்கான வழிமுறைகள் என அறிக்கை முன்வைக்கும் பரிந்துரைகளில் சில.

✸ சாதி அடையாளம் காட்டும் வண்ணக் கயிறுகளைக் கையில் கட்டுவது, நெற்றியில் பொட்டு வைப்பது, வளையங்களை அணிவது போன்றவற்றை பள்ளிகளில் அணியக் கூடாது.

✸ சாதி அடையாளம் காட்டுகின்ற, அல்லது சாதி உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற சைக்கிள் களைப் பயன்படுத்தக் கூடாது.

✸ இதுபோன்றவை குறித்துப் பெற்றோர்களை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

✸ பெயர்களின் அகர வரிசைப்படி மாணவர்கள் வகுப்பில் அமர வேண்டும். அதுபோலவே, வருகைப் பதிவேட்டில் சாதி தொடர்பான எந்தக் குறிப்பும் இருக்கக் கூடாது. மாணவர்களின் சாதி இரகசியமாக வைக்கப்பட வேண்டும்.

✸ மாணவரின் சாதிப் பெயரை நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆசிரியர் குறிப்பிடக் கூடாது. திட்டுவதற்கு சாதியைப் பயன்படுத்தக் கூடாது.

✸ பள்ளிகளின் பெயரில் சாதி இருக்கக் கூடாது. தற்போதுள்ள தனியார் பள்ளிகளின் பெயரில் சாதி அடையாளம் இருக்கும் என்றால், அதனை நீக்கும்படி பள்ளிக் கல்வித் துறை நிர்வாகத்தைக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

✸ மத மற்றும் சாதிய நல்லிணக்கத்திற்கு ஊறு விளைவிக்கும் வகையில் கல்வியை காவிமயப் படுத்துவது மற்றும் கல்வி நிறுவனங்களில் காவி கருத்தியலைப் பரப்பும் நடவடிக்கைகள், ஊடுருவல் தொடர்பான குற்றச்சாட்டுகள் பற்றி விசாரிக்க நிபுணர் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

✸ உயர் நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் உரிய காலத்தில் இட மாற்றம் செய்யப்பட வேண்டும். ஒரு பகுதியில் ஆதிக்க சாதியாக இருக்கும் ஒரு சாதியைச் சேர்ந்தவர் அப்பகுதியின் தலைமை கல்வி / மாவட்ட கல்வி/ வட்டாரக் கல்வி அதிகாரியாக பொறுப்பில் அமர்த்தக் கூடாது என்று கமிட்டி சொல்கிறது.

✸ பள்ளிகளில் அற நெறி வகுப்புகள் நடத்தப்பட வேண்டும். சமூக நீதி, சமத்துவம், பாரபட்சம் காட்டாதிருப்பது குறித்த அறநெறி வகுப்புக்கான உள்ளடக்கம் உருவாக்கப்பட்டு பொருத்தமான நபர்களைக்கொண்டு, அனைத்து வகைப் பள்ளிகளிலும், 6 முதல் 12 வரையிலான வகுப்புகளில் பாடம் எடுக்கப்பட வேண்டும்.

✸ மாணவர்களுக்கான உணவைப் பள்ளிகளில் சமைப்பதைத் தவிர்த்து ஒன்றிய அளவில் பொதுச் சமையல் கூடம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

✸ பள்ளிகளில் அனைத்து சமூக மாணவர் களையும் உள்ளடக்கிய, சமூக நீதி அரசியலைப் பரப்பும் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதாக இருக்கும், சமூக நீதி மாணவர்ப் படை (Social Justice Students Force -SJSF) அமைக்கப்பட வேண்டும்.

✸ பள்ளிகளில் மாணவர் சங்கம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

அழைத்துப் பேச வேண்டும். பொருத்தமான நமது சமூகத்தின் பிற்போக்குத் தன்மையின் அடையாளமாகவும் உந்து சக்தியாகவும் சாதி இருக்கிறது. இந்து மதத்தின் உருவாக்கமான சாதி பிற மதங்களிலும் கூட தனது தடத்தைப் பதித்துள்ளது. ஒரு தனி நபரின் உடை அல்லது முகத்தில் பூசும் பொருட்களைக் கொண்டே அவரின் சாதி, உள்சாதி என்ன என்று கண்டுபிடிக்க முடியும். அவரின் மதம் என்ன என்பதையும் கண்டறிய முடியும். மதங்களின் பெயரால் அரசியல் செய்து வெறுப்பை வளர்க்கும் பிஜேபி உள்ளிட்ட கட்சிகளுக்கு சாதி நிலைத் திருப்பது தேவையானதாக இருக்கிறது. அதனால் தான், அவர்கள் சந்துரு அறிக்கையை எதிர்க்கி றார்கள். அறிக்கை குறிப்பிடுகின்ற அம்சங்கள் சமூகத்தின் பல அடுக்குகளில் சாதி இன்னமும் ஒரு சக்தியாகச் செயல்பட்டு சமூகத்தைப் பின்நோக்கி இழுப்பதைக் காட்டுகிறது. குறிப்பாக பள்ளிக் கல்வித்துறை உயர் அதிகாரிகளின் பணி இடம் பற்றி அறிக்கை பேசுவது சாதிகள் பள்ளி நிர்வாகத்தையும் கையில் எடுத்துக்கொண்டுள்ளன என்பதை வெளிப் படுத்துகிறது.

பெரிய ஓட்டல்களில் சமைப்பவர் எந்த சாதியைச் சேர்ந்தவர் என்று தெரிந்து யாரும் சாப்பிடுவதில்லை. அதுபோல வட்டார அளவிலான பொதுச் சமையலறை என்பது தேவையான ஒன்றுதான். மேலும், பல பள்ளி மாணவர்களை பகுதி அளவில் இணைக்கும் சமூக நீதிக்கான மாணவர் இயக்கம், மாணவர் சங்கத்தின் தேவை என்ற முன்வைப்புகளும் கவனத்துக்குரியவை.

திராவிட முற்போக்கு அரசியலின் தாக்கம் மிகவும் அதிகமாக இருந்த சென்ற நூற்றாண்டு காலத்தில், சாதி ஒழிப்பு இயக்கங்களும், விழிப் புணர்வும் மிகவும் தூக்கலாக இருந்தன. சாதிகளை பெயரின் பின்னால் வைத்துக்கொள்வது ஏறக் குறைய இல்லாத மாநிலமாக தமிழ்நாடு ஆகியிருக்கிறது. இருந்தபோதும், திராவிட கட்சிகள் ஆட்சி அமைத்த பின்னர், தேர்தல் அரசியல் ஆதாயத்திற்காக அக்கட்சிகளுக்குள் சாதி ஆதிக்கமும், சாதியப் பாகுபாடும் தங்களைப் புதுப்பித்துக்கொண்டன. அதனையொட்டி, கீழ் மட்டம் வரையிலும் சாதி ஆதிக்கப் படிகளில் திராவிட கட்சிகளின் நபர்கள் இருந்து வழி நடத்துவதை தமிழ்நாடு எங்கும் பார்க்க முடிகிறது. ஒரு பகுதியில் ஆதிக்கம் செய்யும் சாதி நபர்களின்/ பெரும்புள்ளிகளின் கீழ்தான் கட்சிகளும், அரசு நிர்வாகமும் இயங்குகின்றன.

இந்த சூழலில், பெரியாரும் கம்யூனிஸ்டுகளும் முன்னின்று எடுத்த சாதி ஒழிப்புப் போரை மறுபடியும் ஒரு சமூக இயக்கமாக மாற்ற வேண்டியிருக்கிறது.

பள்ளி மாணவர்கள் மத்தியில் ஜனநாயக நிறுவனங்கள் குறித்த பயிற்சியை அளிக்க மாணவர் சங்க தேர்தல், சமூக நீதிக்கான மாணவர் படை உள்ளிட்ட அமைப்புகள் தேவையாக இருக்கின்றன.

## ஒரு புதிய பண்பாட்டுப் போர் தேவை

சாதி ஒழிப்பு இன்று அமெரிக்கா வரை பரவியிருக்கிறது. அங்கே சென்று குடியேறிய மேல்சாதியினர் சாதி பாரபட்ச நடைமுறைகளை அங்குள்ள கம்பெனிகள்/ நிறுவன செயல்பாடுகளில் கொண்டுவந்துவிட்டதால் அவற்றைத் தடுப்பதற் கான சட்டங்கள் கோரி அமெரிக்காவில் வாழும் இந்தியர்கள் போராடிக்கொண்டுள்ளனர். இங்கே ஒன்றிய ஆட்சியில் இருப்பவர்கள் நாடாளுமன்றத் திலேயே சாதிப் பெருமையைப் பேசுவதைக் கேட்க முடிகிறது.

இந்தியாவில் காவிப் பாசிச அபாயம் நீடிக்கும் சூழலில், பகுத்தறிவுப் பாரம்பரியத்தை இன்றைய சூழலுக்கு ஏற்ப முன்னெடுத்துச் செல்ல வேண்டி யிருக்கிறது. அந்த பெரும் பணிக்கு நீதிபதி சந்துரு கமிட்டி அறிக்கை உதவியாக இருக்கும்.

தமிழ்நாட்டின் இன்றைய இளைஞர்களும் சாதி ஒழிப்பு, பகுத்தறிவு, மது உள்ளிட்ட போதை களுக்கு எதிரான இயக்கத்தை துடிப்புடன் முன்னெடுக்க வேண்டும்.

நீதிபதி சந்துரு முன்வைத்துள்ள சமூக நீதிக்கான மாணவர் படை அமைக்கப்படவும், மாணவர் சங்கத் தேர்தல்களை நடத்தக் கோரியும் நமது மாணவர், இளைஞர் அமைப்புகள் களம் காண வேண்டும்.

முற்போக்கான இளைஞர்கள், அமைப்புகள் சமூக நீதிக்கான மாணவர் படை அமைப்பதை உடனே துவங்க வேண்டும். அந்தப் படையானது மாணவர்கள் மத்தியில் அம்பேத்கர், பெரியார் கருத்துகளைக் கொண்டு செல்ல வேண்டும். இல்லம் தேடி கல்வியில் கூட இதைக் கொண்டு வரலாம்.

அறிக்கையில் உள்ள சில விசயங்களை அப்படியே ஏற்றுக் கொள்ளவும் முடியாத நிலை உள்ளது. உதாரணமாக, சமூகத்தில் பெண்களின் நெற்றிப் பொட்டானது பொதுவாக மத அடையாளம் என்பதை விடவும் மதச்சார்பற்ற கலாச்சாரக் குறியீடாக மாறியுள்ளது. கணவனை இழந்த பெண்கள் பொட்டு வைக்கக் கூடாது என்பதை எதிர்த்து தற்போது பொட்டு வைத்துக் கொள் கிறார்கள். பாஜகவினர் இதை இந்து மதத்திற்கு எதிரானது என்று காட்டி நீதிபதி சந்துரு அறிக்கையை எதிர்க்கிறார்கள். பரிந்துரைகளில் வரவேற்க பல அம்சங்கள் இருக்கின்றன. அதேவேளை பரிந்துரை களைத் தாண்டியும் சொல்லப் பட வேண்டியவை பல உள்ளன. பொது விவாதத்திற்கு விடும் நோக்கில் அறிக்கை சட்டப் பேரவையில் வைக்கப்பட வேண்டும். ❑

# நீட் மோசடி 2024

## கோடிக்கணக்கான இந்திய இளைஞர்களின் எதிர்காலத்தோடு விளையாடுவதை மோடி அரசு நிறுத்த வேண்டும்

ஜூன் 4, 2024 அன்று, 18 வது மக்களவைத் தேர்தல் முடிவுகள் ஒளிபரப்பப்பட்டது. அப்போதே, நீட் தேர்வு எழுதிய 24 லட்சம் பேர்களின் எதிர்காலம் மற்றொரு ஊழலில் சிக்கியது என்ற செய்தியும் வெளிவந்தது. நாடு முழுவதும் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் எம்.பி.பி.எஸ்., பல் மருத்துவம், ஆயுஷ் படிப்புகளில் சேருவதற்காக நடத்தப்படும் தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு (நீட்) முடிவுகள், மக்களவைத் தேர்தல் முடிவுகள் வெளியான அதே நாளில் அறிவிக்கப்பட்டன. இதனால், நீட் தேர்வில் நடைபெற்ற ஊழல் மக்களின் கவனத்தைக் கவரவில்லை. மோசடியை அம்பலப்படுத்திய மாணவர்களிடமிருந்து வெடித்துக் கிளம்பிய கோபம் சமூக ஊடகங்களில் பரவத் தொடங்கிய பின்பு தான் நீட் 2024 தேர்வில் நடைபெற்ற ஊழல் கவனத்தைக் கவர ஆரம்பித்தது. இந்த மாபெரும் மோசடியின் தன்மை வெளிச் சத்துக்கும் வந்தது. இந்த மோசடிக்கு எதிராக மாணவர்கள் வீதிகளில் இறங்கத் தொடங்கினர்.

மருத்துவப் படிப்புகளில் சேருவதற்கான முந்தைய மாநில அளவிலான நுழைவுத் தேர்வு களுக்கு பதிலாக, நீட் தேர்வு 2016 ஆம் ஆண்டில் மோடி அரசாங்கத்தால் தேசிய அளவிலான ஒற்றை நுழைவுத் தேர்வாக அறிமுகப்படுத்தப் பட்டது. தேர்வு முறை மையப்படுத்தப்பட்டதால், தொடக்கத் திலிருந்தே நீட் தேர்வு முறை குஜராத், தமிழ்நாடு, மேற்கு வங்கம் உள்ளிட்ட பல மாநில அரசுகளால் கேள்விக்குள்ளாக்கப்பட்டது.

இந்த ஆண்டு மே மாதம் நீட் தேர்வு நடத்தப்பட்ட உடனேயே, பீகார் துவங்கி குஜராத் வரை வினாத்தாள் கசிந்த செய்திகள் வெளிவரத் தொடங்கின. கசிந்த வினாத்தாள்களுக்காக தேர்வு வெழுத இருந்தவர்களிடமிருந்து ரூ. 30 லட்சம் முதல் ரூ.50 லட்சம் வரை பேரம் பேசிய 13 பேரை பாட்னா போலீசார் கைது செய்தனர். ஒரு பள்ளி ஆசிரியரும் பாஜக தலைவருடன் தொடர்புள்ள கல்வி ஆலோசனை நிறுவனத்தின் உரிமையாளர் ஒருவரும் நடத்திய முழு நீள மோசடியையும் குஜராத் போலீசார் கண்டுபிடித்தனர். தேர்வுகளில் வெற்றி பெற வைப்பதற்கு ரூ.10 லட்சம் வரை அவர்கள் வசூலித்திருக்கின்றனர். நீட் தேர்வை நடத்தும் தேசிய தேர்வு முகமை (என்.டி.ஏ) இந்த மோசடி குறித்து அறிந்திருந்ததால், திட்டமிடப்பட்ட தேதிக்கு பத்து நாட்களுக்கு முன்னதாகவும், 2024 மக்களவைத் தேர்தலின் வாக்கு எண்ணிக்கையுடன் ஒத்துப் போகும் வகையிலும் ஜூன் 4 ஆம் தேதி முடிவுகளை வெளியிட்டது. தேர்வு முகமையின் நோக்கம் வெளிப்படையாகத் தென்படும் ஒன்றுதான் நீட் ஊழலில் இருந்து தேசத்தின் கவனத்தை திசை திருப்புவதற்காக தேர்தல் முடிவு பரபரப்புக்கு இடையில் தேர்வு முடிவுகளை வெளியிட்டுள்ளனர்.

நீட் 2024 இன் முழு நிகழ்வுப்போக்கும், ஆரம்பத்திலிருந்தே சர்ச்சையில் சிக்கிய ஒன்றாக உள்ளது. முதலாவதாக, நீட் 2024 க்கான ஆன்லைன் பதிவு பிப்ரவரி 9 ஆம் தேதி தொடங்கி மார்ச் 16 வரை நீட்டிக்கப்பட்டது. திடீரென்று, ஏப்ரல் 9 அன்று, தேர்வை சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடத்துவதற்கான அனைத்து விதிமுறைகளையும் மீறி, 'சம்பந்தப்பட்டவர்களின்' (stakeholders) வேண்டுகோளின்' பேரில் பதிவு இரண்டு நாட்களுக்கு மீண்டும் திறக்கப்படும் என்று தேசிய தேர்வு முகமை அறிவித்தது. 67 மாணவர்கள் முழு மதிப்பெண்ணான 720 மதிப்பெண்களுடன் முதலிடம் பிடித்தது குறித்தும் கேள்விகள் எழுப்பப்படுகின்றன. இந்த 67 மாணவர்களில் ஆறு பேர், ஹரியானாவின் ஜஜ்ஜாரில் உள்ள ஒரே பயிற்சி மையத்தைச் சேர்ந்தவர்கள். மேலும் இரண்டு மாணவர்கள், பெறுவதற்கு வாய்ப்பு இல்லாத 719, 718 என்ற மதிப்பெண்களைப் பெற்றுள்ளார்கள். மாணவர்கள் தங்களின் ஓஎம்ஆர் தாள் மதிப்பெண்கள் தேர்வின் இறுதி முடிவுடன் எவ்வாறு பொருந்தவில்லை என்பதையும் அம்பலப்படுத்தி யுள்ளனர். தேர்வு தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டதால் சுமார் 1500 மாணவர்களுக்கு கருணை மதிப்பெண்கள் வழங்கப்பட்டதாக தேசிய தேர்வு முகமை அளித்த விளக்கம் சர்ச்சையை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது.

மாணவர்களால் எழுப்பப்படும் மற்றொரு முக்கிய கவலை ஊதிப்பெருக்க வைக்கப்பட்ட தரவரிசைப் பட்டியலாகும். 2022ல், 715 மதிப்பெண் பெற்றவர் முதல் ரேங்க் என்று அறிவிக்கப்பட்டார். 2023 ல் கூட அது 4 வது ரேங்க் ஆக இருந்தது. இந்த ஆண்டு அதே மதிப்பெண் 225 ரேங்க் ஆக வைக்கப்பட்டுள்ளது! 2022ல் 700 மதிப்பெண்

பெற்றவரின் ரேங்க் 49! 2023ல் அது 294. இந்த ஆண்டு அதன் ரேங்க் 1,770! கால ஓட்டத்தின் போக்கில் தேர்வு இலகுவாக மாறிவிடவில்லை, அல்லது எழுத வரும் மாணவர் களின் திறன் மலை அளவுக்கு உயர்ந்துவிட வில்லை. தேர்வுகளை நடத்தும் நிறுவனம் உள்ளி ருந்தே சரிக்கட்டப்பட்டுவிட்டது. அதன் காரணமாக, மிகச் சிறப்பாக கட்டமைக்கப்பட்ட ஊழலுக்கு மாணவர்களும், அவர்களின் பெற்றோர்களும் விலை கொடுத்துக் கொண்டுள்ளனர்.

நீட் தேர்வு சட்டவிரோதமானது, அரசியலமைப் பிற்கு எதிரானது என 2013ல் உச்சநீதிமன்றம் அறிவித்தது. இருப்பினும், 2016ல் ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியலமைப்பு அமர்வு நீட் தேர்வுக்கு வாழ் வளித்தது. அதனை அடுத்து, நீட் தேர்வை நடத்து வதற்காக, 2017 நவம்பரில் கல்வி அமைச்ச கத்தின் கீழ் தேசிய தேர்வு முகமையை மோடி அரசாங்கம் உருவாக்கியது.

இந்த அதி மையப்படுத்தப்பட்ட 'ஒரே நாடு, ஒரே தேர்வு' வகையில் உருவாக்கப்பட்ட தேர்வு முறை, உள்ளார்ந்த வகையில் பணக்காரர்களுக்கும், செல்வாக்கு செலுத்த முடிந்தவர்களுக்கும் ஆதர வான சார்பைக் கொண்டுள்ளது. மேலும், பயிற்சி மைய நிறுவன தொழில்துறை கொள்ளையர் களின் எழுச்சியும், கேள்வித்தாளை கடத்தி விற்கும் கொள்ளையர்களின் எழுச்சியும் கூட்டு சேர்ந்து கொள்ள இந்த அமைப்பு இப்போது மிகவும் நியாயமற்றதாகவும், வெளிப்படைத் தன்மையற்ற தாகவும் மாறியுள்ளது. இத்தகைய அதி மையப் படுத்தப்பட்ட, வெளிப்படைத் தன்மையற்ற ஊழல் நிறுவனங்களின் தாக்கம் நாட்டின் மருத்துவ உள்கட்டமைப்பின் தரத்தை எந்த அளவுக்கு பாதிக்கும் என்ற கேள்வி மிக ஆழமான கவலையில் நம்மை ஆழ்த்துகிறது. 'தகுதிக்குத்தான் முக்கியத் துவம்' என்று கூச்சல் போடும் "இட ஒதுக்கீட்டு எதிர்ப்பாளர்கள்" இப்போது மௌனமாக இருக்கி றார்கள். ஒவ்வொரு நாளும் அதிகரித்த அளவில் வணிகமயமாக்கப்படும் ஊழல் மிகுந்த கல்வி முறையில் விதிகளை மீறி பணம் படைத்தவர்கள் நடத்துகிற படுபயங்கரமான விளையாட்டுகளை இந்தத் 'தகுதியின் காவலர்கள்' கண்டுகொள்ளா திருக்கிறார்கள்.

பல்வேறு சமூக பின்னணிகளையும் கல்வி பின்னணி களையும் சேர்ந்த மாணவர்கள் மீது நீட் தேர்வின் தாக்கம் குறித்து ஆய்வு செய்ய 2021 ஆம் ஆண்டில் (நீட் அறிமுகப்படுத்தப்பட்ட 5 ஆண்டுகளுக்குப் பிறகு) நீதிபதி ஏ.கே.ராஜன் தலைமையில் ஒரு குழுவை தமிழக அரசு அமைத்தது. நீட் அறிமுகத்திற்குப் பிறகு மருத்துவக் கல்லூரி களின் மாணவர் சேர்க்கையில் ஆங்கிலவழி மாணவர்களின் பங்கு கணிசமாக அதிகரித்துள்ளதை இந்தக் கமிட்டி கண்டறிந்தது. நீட் தேர்வுக்கு முந்தைய 2010–11 முதல் 2016–17 வரையிலான காலகட்டத்தில், கிராமப் புறங்களைச் சேர்ந்த மாணவர்கள் அரசு மருத்துவக் கல்லூரிகளில் சராசரியாக 61.5% இடங்களைப் பெற்றனர், 2020–21 வாக்கில், இந்த எண்ணிக்கை 49.91% ஆக குறைந்தது என்பதையும் கமிட்டி கண்டறிந்து வெளிப்படுத்தியது. குறைந்த வருமானம் கொண்டவர்கள் மற்றும் தமிழ்வழியில் கற்றவர்களின் பங்கு குறைந்து, அதிக வருமான பின்னணி கொண்ட சிபிஎஸ்இ பள்ளிகளில் படித்த மாணவர்களின் பங்கு மருத்துவப் படிப்பில் அதிகரித்து வருவதையும் ஆய்வு சுட்டிக்காட்டியது. மையப்படுத்தப்பட்ட தேர்வு முறை குறித்து பல மாநில அரசுகள் எழுப்பிய கவலையை ராஜன் குழுவின் கண்டுபிடிப்புகள் உறுதிப்படுத்துகின்றன.

அனைத்து மத்திய பல்கலைக்கழகங்களிலும் மாணவர் சேர்க்கையை நடத்துவதற்கான மையப் படுத்தப்பட்ட தேர்வு முறையாக மத்திய பல்கலைக் கழக நுழைவுத்தேர்வு (கியூட்), மோடி அரசாங்கத் தால் 2020–21ல் அறிமுகப்படுத்தப் பட்டது. பல்வேறு மொழி, பிராந்திய, சமூக பின்னணியைச் சேர்ந்த இந்திய மாணவர்கள் மீது திணிக்கப்பட்ட மையப்படுத்தப்பட்ட தேர்வு முறைக்கு இதுவும் மற்றுமொரு எடுத்துக்காட்டு ஆகும். நீட் வழியில் கியூட்டும் நாட்டின் மத்திய பல்கலைக்கழகங்களில் இருந்து பல்வேறு மாநில கல்வி முறையில் படித்த மாணவர்களை திட்டமிட்டு வெளியேற்றி வருகிறது.

உச்சநீதிமன்றத்தில் நீட் தொடர்பான அனைத்து மனுக்களின் மீதான விசாரணைகள் முடியும்வரை நாம் காத்திருக்க வேண்டியிருக்கிறது. இச்சமயத்தில், நீட் 2024 தேர்வு முடிவுகளை ரத்து செய்ய வேண்டும் என்றும், அனைத்து குளறுபடிகளையும் முடிவுக்குக் கொண்டுவர தேர்வை புதிதாக நடத்த வேண்டும் என்றும் எழுந்துள்ள மாணவர்களின் கோரிக்கையை நாம் ஆதரிக்க வேண்டும். திறமையற்ற தேசிய தேர்வு முகமையை கலைக்க வேண்டும், நியாயமற்ற நீட் முறையையே ரத்து செய்ய வேண்டும் என்ற மிகவும் அடிப்படையான கோரிக்கைகள் அதிகரித்த படி இருக்கின்றன. நமது உயர்கல்வி அமைப்பில் மிகவும் அதிகரித்து வரும் அதி மையப்படுத்துதல், வணிகமயம், ஊழல் ஆகியவற்றால் நிகழும் பேரபாயங்களை இனியும் இந்த நாடு கண்டுகொள்ளாதிருக்க முடியாது. ❑

2024 ஜூன் 15–16 தேதிகளில் பாட்னாவில் நடைபெற்ற இகக(மாலெ) விடுதலையின் மத்தியக் கமிட்டிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட

# தீர்மானங்கள்

1. மக்களவை தேர்தல் முடிவுகள், மோடி சர்வாதிகாரத் திற்கும் பாஜகவின் அரசியல் ஆதிக்கத்துக்கான தேடுதல் முயற்சிக்கும் எதிரான மக்கள் தீர்ப்பு எனக்கூறி மத்தியக் கமிட்டி வரவேற்றது. ஜனநாயகம், அரசமைப்புச் சட்டத்துக்கான போராட்டத்தை தொடரவும் உறுதி ஏற்றது. கட்சி வேட்பாளர்களான தோழர் ராஜாராம் சிங் தோழர் சுதாமா பிரசாத் ஆகியோர் முறையே காரகாட்டிலும் அர்ராவிலும் வெற்றி பெற்றதற்கு மத்தியக் கமிட்டி வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது. தோழர் மனோஜ் மன்சிலின் பொய் வழக்கில் தண்டிக்கப்பட்டு அவரது சட்டமன்றப் பதவியை அநியாயமாக ரத்து செய்யப்பட்டது. இதையடுத்து நடைபெற்ற அகியோன் சட்டப் பேரவை தொகுதி இடைத்தேர்தலில் தோழர் சிவபிரகாஷ் ரஞ்சனை வெற்றிபெறச் செய்ததற்காக அகியோன் மக்களுக்கு மத்தியக் கமிட்டி நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

2. தேசிய ஜனநாயக கூட்டணிக்கு எதிரான இந்தியா கூட்டணியின் போராட்ட முயற்சிகளை மத்தியக் கமிட்டி பாராட்டுகிறது; மக்களது விருப்பங்களை முழுமையாக நிறைவேற்றும் அதே வேளை, பாஜக வுக்கு எதிராக அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைக்கும் முயற்சிகளைத் தொடர்வதென்றும் தீர்மானிக்கிறது.

3. 2024 மக்களவைத் தேர்தலில் பாஜகவுக்கு எதிராக மக்கள் தீர்ப்பளித்துள்ள போதிலும், ஒடிசாவில் ஆட்சிக்கு எதிரான மக்கள் உணர்வையும் அங்குள்ள அரசியல் வெற்றிடம், மாற்றத்திற்கான மக்கள் ஏக்கம் இரண்டின் மீதும் சவாரி செய்து பாஜக ஆட்சிக்கு வந்துள்ளது. 24 ஆண்டுகால முதல்வர் நவீன் பட்நாயக்கின் பதவிக்காலம் முடிவுக்கு வந்துள்ளது, கிரஹாம் ஸ்டெயினையும் அவரது சின்னஞ்சிறு மகன்கள் இருவரையும் கொடூரமாகக் கொலைசெய்த குற்றவாளியான தாரா சிங்கையும், அவனது கூட்டாளி களையும் விடுவிக்கக் கோரி போராட்டம் நடத்தி அவப்பெயர் பெற்ற மோகன் மஜ்ஹியை முதல்வராகக் கொண்டு கார்ப்பரேட் சார்பு பாஜக ஆட்சியமைத் துள்ளது. சத்தீஸ்கர், மத்தியப் பிரதேசம், குஜராத் மாநிலங்களை நடத்திச் செல்லும் அதே திசையில் ஒடிசாவையும் கொண்டு செல்ல முனையும் பாஜகவின் நோக்கத்தை மத்தியக் கமிட்டி சுட்டிக்காட்டியது. பாஜகவின் இந்த நோக்கத்தை, மாபெரும் ஒற்றுமையுடனும் உறுதிப்பாட்டுடனும் எதிர்த்துப் போராட ஜனநாயக சக்திகளுக்கு மத்தியக் கமிட்டி அழைப்பு விடுக்கிறது.

4. பைசாபாத் தொகுதியில் தலித் சமாஜ்வாதி வேட்பாளர் அவதேஷ் பிரசாத்திடம் பாஜக தோல்வி அடைந்ததற்காக அயோத்தி மக்களுக்கு எதிரான இழிந்த வலதுசாரி எதிர்த்தாக்குதலை நிராகரிக்கு மாறு மத்தியக் கமிட்டி மக்களுக்கு அழைப்பு விடுக்கிறது. அங்குள்ள பாஜக ஆதரவாளர்களும் வலதுசாரி சூழலும் அயோத்தியில் உள்ள இந்துக்களுக்கு எதிராக, அவர்கள் நன்றி இல்லாதவர்கள், சந்தர்ப்பவாதிகள் என்று அறிவித்து, அவர்களை (இந்துக்களை) புறக்கணிக்க வேண்டு மென்றும் தீவிரமான வெறுப்பு பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளனர். அயோத்தி வாக்காளர்களை அவதூறு செய்யும் பாஜகவின் செயல், வாக்காளர் களை சொந்தம் கொண்டாடும் அதன் இழிந்த மனப்போக்கை அம்பலப்படுத்துகிறது.

5. 2024 மக்களவை தேர்தல் மின்னணு வாக்கு இயந்திரம் தொடர்பான மேலதிகமான கேள்விகள், சந்தேகங்கள், அய்யங்களை எழுப்பியுள்ளது. முதல் கட்ட வாக்குப் பதிவிற்குப் பிறகு 11 நாட்கள் கடந்தும் இரண்டாவது கட்டத்திற்குப் பிறகு 4 நாட்கள் வரையிலும் மொத்த வாக்கு எண்ணிக் கையை ஏன் அறிவிக்கத் தவறியது என்பதை இந்திய தேர்தல் ஆணையம் இன்னமும் தெளிவுபடுத்த வில்லை. இந்த காலக் கட்டத்தில் 1 கோடியே 7 லட்சம் வாக்குகளும் வாக்கு சதவீதம் 5.7% அதிகரித்ததற்கும் இன்னும்கூட நம்பகமான விளக்கத்தை தேர்தல் ஆணையம் தரவில்லை. 362 மக்களவைத் தொகுதிகளில் உள்ள 5,54, 598 வாக்குகளை தேர்தல் ஆணையம் கணக்கிலெடுக்கத் தவறியதாகவும், 140க்கும் மேற்பட்ட மக்களவைத் தொகுதிகளில் பதிவான வாக்குகளுக்கும் எண்ணப் பட்ட வாக்கு களுக்கும் இடையே முரண்பாடு இருப்ப தாகவும் தற்போது தகவல்கள் வெளியாகி யுள்ளன. தேர்தல் ஆணையத்திடமிருந்து தக்க பதில்களைக் கோரி இன்னும் கூடுதலான வீறுகொண்ட அறுதியிடலுடன் மக்கள் தெருக் களுக்கு வந்தாக வேண்டும்.

6.தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக்கணிப்பு பங்குச் சந்தை ஊழல், பங்குச் சந்தை மோசடிக்கு வழிவகுத்த நரேந்திரமோடி, அமித்ஷாவின் அறிக்கைகள் மீதான விசாரணை வேண்டு மென்ற பொது மக்கள் கோரிக்கையை மத்தியக் கமிட்டி அங்கீகரிக்கிறது. ஜூன் 1, 2 தேதிகளில் வெளியான கருத்துக் கணிப்புகள் பாஜக, தேசிய ஜனநாயக கூட்டணி அமோக வெற்றிபெறும் என்று செய்திகள் பரப்பப் பட்டதை தொடர்ந்து, நி∴ப்டி, சென்செக்ஸ் எப்போதும் இல்லாதவாறு பங்குச் சந்தையில் உச்சத்துக்கு எகிறியது. ஆனால், ஜூன் 4ல் தேர்தல் முடிவுகள் வெளியானதைத் அடுத்து, கருத்துக் கணிப்புகள் தவறாகப் போனதால் பங்குச் சந்தைகள் சரிந்து பல லட்சம் கோடி இழப்புகளை சந்தித் துள்ளன.

7. நீட் தேர்வு நடத்துவதில் நடந்துள்ள பெரும் ஊழல் முறைகேடுகளும் திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளன. அது போட்டித் தேர்வுகளை தனியார் மயமாக்கு வதற்கும் இட்டுச்சென்றுள்ளது. பிராந்தியத் தேவைகளுக்கு ஏற்ப பல்வேறு மாநில வாரியங்கள் வேறுவேறு பாடத் திட்டங்களை கொண்டுள்ள பன்மைத்துவ இந்தியாவில் ஒரே நாடு ஒரு தேர்வு மாதிரி தவறானது என்பதை நீட் தேர்வுகள் அது தொடங்கப்பட்டதிலிருந்தே வெளிப் படுத்தியுள்ளன. தேசிய

தேர்வுகள் முகமை மூலம் தேர்வுகள் நடத்துவதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும், பல்கலைக்கழகங்கள் தங்கள் சொந்த நுழைவுத் தேர்வுகளை தாங்களே நடத்திக் கொள்ள வேண்டுமென்றும் கட்சி தொடர்ந்து போராடும்.

8. சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் அருந்ததி ராய், ஷேக் சவுகத் ஹுசைன் மீது வழக்குத் தொடர தில்லி துணைநிலை ஆளுநர் அனுமதி வழங்கியது, ஜனநாயகம், மாறுபட்ட குரலை பழிவாங்கும் நடவடிக்கையின் மற்றொரு எடுத்துக் காட்டாகும். இது இந்தியவகை பாசிசத்தின் முக்கிய இயல்பாக மாறியுள்ளது. தில்லியின் அதே துணைநிலை ஆளுநர்தான் செயல்பாட்டாளர் மேதா பட்கருக்கு எதிரான பொய்யான அவதூறு வழக்கு தொடுத்து, அதனால் குற்றவாளி என அறிவிக்கப் பட்டு தண்டனையை எதிர் நோக்கியிருக்கிறார். அனைத்து கொடூரமான சட்டங்களையும் திரும்பப் பெறவும், அரசியல் கைதிகள், தண்டனைக் காலங்கள் முடிந்த பிறகும் விடுவிக்கப் படாதவர்கள் விடுதலைக்காகவும் கட்சி தொடர்ந்து போராடும்.

9. ஆட்சிக்கு வந்த சில வாரங்களிலேயே அருந்ததி ராய், ஷேக் சவுகத் ஹுசைன் ஆகியோர் மீது வழக்குத் தொடரப்படுவதையும், "தி கேரவன்" பத்திரிகை யாளர்களுக்கு எதிரான முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டிருப்பதும், சத்தீஸ்கரில் இரண்டு முஸ்லீம் ஆண்களைக் கொன்று குவித்ததையும், ஆதிவாசி செயல்வீரர் சுனீதா போட்டம் கைது செய்யப்பட்டுள்ளதும் நடந்துள்ளன. இவை அனைத்தும் பாசிச அரசியலின் தொடர்ச்சியை காட்டுவதற்கான திட்டமிட்ட முயற்சியை வெளிப்படுத்துகின்றன. மோடி ஆட்சியை எதிர்த்து போராட்டங்களை தொடருமாறு நாட்டு மக்களுக்கு மத்தியக் கமிட்டி அழைப்பு விடுக்கிறது.

10. புதிய குற்றவியல் சட்டங்கள் ஜூலை 1 முதல் நடைமுறைக்கு வரவிருக்கின்றன. இச்சட்டங்கள், குடியுரிமைகளையும் மானுட உரிமைகளையும் வலுவிழக்கச் செய்யும். இந்தச் சட்டங்கள், நியாயமான அரசியல் மாற்று கருத்தையும் எதிர்ப்பு தெரிவிப்பதையும் ஒடுக்குவதை எளிதாக்கும். இந்த மூன்று புதிய குற்றவியல் சட்டங்களையும் திரும்பப் பெற வேண்டும் என்று மத்தியக் கமிட்டி வலியுறுத்துகிறது. "சட்டங்களை காலனித்துவ நீக்கம்" செய்வதாகச் சொல்லப்படும் இந்த கேலிக்கூத்தை அம்பலப்படுத்துமாறு மக்களை வலியுறுத்துகிறது; உண்மையில் இது, குடியுரிமை களைக் கட்டுப்படுத்து வதற்காக காலனித்துவ போலீஸ் அதிகாரங்களை ஆழமாக்குவதையும் போலீஸ் ஆட்சியை வழக்கமாக்கி விட முயல்வதையுமே அர்த்தப் படுத்துகிறது என்பதையும் அம்பலப்படுத்தியாக வேண்டும்.

11. வதோதராவில் 462 வீடுகள் கொண்ட ஒரு வளாகத்தில் ஒரு தனி முஸ்லீம் பெண்ணுக்கு வீடு ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கு எதிராக, மதவெறி பிடித்த குடியிருப்பாளர்கள் கும்பலாக ஒன்றுகூடி நிற்பது, முஸ்லிம்கள், தலித்துகளுக்கான குடியிருப்பு உரிமையை பறிக்கும் சாதிய ஒதுக்குதலின் பகிரங் கமான இந்து மதவெறி அணிவகுப்பே தவிர வேறல்ல. பரந்த சமூகத்தின் மௌனம் வெறுப்பு வெறியர்களுக்கு துணிச்சல் அளிக்கிறது. வெறுப்புக்கு எதிராக ஒன்றுபடுங்கள், நீதிக்காக ஒன்று படுங்கள், மதச் சிறுபான்மையினர் மனிதர்களல்ல என நிரந்தரப் படுத்தும் முயற்சியை மறுத்து ஒன்றுபடுங்கள் என மக்களுக்கு மத்தியக் கமிட்டி அழைப்பு விடுக்கிறது.

12. 2017 ஜூன் மாதம் மத்தியப் பிரதேசத்தின் மண்ட்சவுரில் நடந்த விவசாயிகள் போராட்டத்தின் போது ஆறு விவசாயிகள் சுட்டுக் கொல்லப் பட்டதற்கு காரணமான மத்தியப் பிரதேச முன்னாள் முதல்வர் சிவராஜ் சிங் சவுகானை மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சராக நியமித்ததற்கு விவசாய அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்திருப்பதை மத்தியக் கமிட்டி ஆதரிக்கிறது. மோடி அரசின் இந்த அவமதிப்புக்கு கூடுதலாக, மோடி அரசாங்கத்தின் முதல் அமைச்சரவைக் கூட்டம் கடுமையான விவசாய நெருக்கடியைத் தீர்ப்பதற்கு தவறியது மட்டுமல்லாமல், மேலும் புண்படுத்தும் வகையில், நீண்டகாலமாக நிலுவையில் உள்ள விவசாயிகளின் கோரிக்கைகளான குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு உத்தரவாதம் அளிக்கும் சட்டம், முழு கடன் தள்ளுபடி, மின்சார தனியார்மயமாக்கலை ரத்து செய்வது, உற்பத்தி செலவைக் குறைப்பது, காப்பீடு மற்றும் ஓய்வூதியத்தை உறுதி செய்வது போன்ற நீண்டகாலமாக நிலுவையில் உள்ள கோரிக்கைகளையும் நிறைவேற்றத் தவறியி ருக்கிறது.

13. பற்பல மாநிலங்களிலும், வாழ்வதும், வேலை செய்வதும் சாத்தியம் இல்லை என்ற நிலையை வெப்ப அலை ஏற்படுத்தியுள்ளது. மக்களது உயிர்களும் வாழ்வாதாரமும் இழப்புக்கு ஆளாகி உள்ளன. பேரிடர் அவசரநிலைக்கு உடனடியாக வினையாற்ற வேண்டிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் தலைவரான பிரதமர் அவர் பதவிக்கு வந்து இதுநாள் வரை அந்த கமிட்டி யை ஒருமுறைகூட கூட்டவில்லை. வெப்ப அலையின் காரணமாக மிகவும் கடுமையாக பாதிக்கப் பட்ட, அதிலும் குறிப்பாக மிகவும் பாதிக்கப்படும் ஏழை, தொழிலாளர் வர்க்கத்தைப் பாதுகாக்க அவசியமான உத்தரவுகளை பிறப்பிப்பது பற்றி சொல்லவேத் தேவையில்லை. வெப்ப அலையை எதிர்கொள்ள விரிவான செயல் திட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்றும், வெப்ப அலையில் இறந்தவர்களின் குடும்பங் களுக்கு போதுமான இழப்பீடு வழங்கப் பட வேண்டுமென்றும் நாங்கள் கோருகிறோம்.

14. குடியேறிய காலனித்துவ நிறவெறி அரசான இஸ்ரேலின் பிடிகளில் தற்போது இனப் படு கொலையை எதிர்கொண்டுள்ள பாலஸ்தீன மக்களுக்கு மத்தியக் கமிட்டி தனது ஆழ்ந்த ஒருமைப் பாட்டை மறுஉறுதி செய்கிறது. இஸ்ரேல் நடத்தும் கொடூரமான போர்க் குற்றங்களை கண்டிக்கும் அதேவேளை, இஸ்ரேலுக்கு மீண்டும் இராணுவ ஆதரவை அதிகரிப்பதை நியாயப்படுத்திட பொய்களைப் பயன்படுத்தி, இஸ்ரேல் இன்னும் கூடுதலான போர்க் குற்றங்களை செய்வதற்கான தைரியம் கொடுக்கும் அமெரிக் காவையும் அதன் ஏகாதிபத்திய கூட்டாளி நாடுகளையும்

மத்தியக் கமிட்டி கண்டனம் செய்கின்றது. இந்திய அரசாங்கம், பாலஸ்தீனத்துடனான ஏகாதிபத்திய எதிர்ப்பு ஒருமைப் பாட்டை உயர்த்திப்பிடிக்க வேண்டும், எந்த வகையிலும் இஸ்ரேலின் இனப் படுகொலை திட்டத்தை இந்திய அரசு ஆதரிக்கக் கூடாது என்றும் மத்தியக் கமிட்டி வலியுறுத்து கிறது.

*15.* குவைத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் *41* இந்தியர்கள் உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர் உயிரிழந்த சம்பவம் குறித்து மத்தியக் கமிட்டி தனது ஆழ்ந்த வருத்தத்தையும், வேதனையையும் தெரிவித்துக் கொள்கிறது. காயமடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கவும், உயிரிழந்த தொழிலாளர்களின் குடும்பங் களுக்கு இழப்பீடு வழங்கவும் மத்திய அரசை மத்தியக் கமிட்டி வலியுறுத்துகிறது. குறைந்து வரும் வேலை வாய்ப்பு காரணமாகவும் குறைந்த ஊதியம் காரண மாகவும் இந்தியாவிலிருந்து பிற நாடுகளுக்குச் செல்லும் புலம்பெயர்ந்த தொழிலாளரின் உரிமைகள், பாதுகாப்பு குறித்த அக்கறையின்மையை மத்திய அரசு கைவிட வேண்டிய நேரமிது.

*16.* மோதல் என்ற போர்வையில் சத்தீஸ்கார் பழங்குடி மக்கள் மீது நடத்தப்பட்டுவரும் பாஜக அரசின் இடைவிடாத தாக்குதல்களில் ஆதிவாசிகள் மீண்டும் மீண்டும் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டு வருவதை மத்தியக் கமிட்டி கண்டிக்கிறது. கடந்த ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் பாஜக பெற்ற வெற்றியாலும், இப்போது அதிக தொகுதிகளில் வெற்றிபெற முடிந்ததாலும் தைரியமடைந்துள்ள மோடி ஆட்சியும் சங்பாஜக படையும் சத்தீஸ்கர் மக்கள் மீது தங்களின் பாசிச தாக்குதலை தீவிரப்படுத்தவே செய்யும். சத்தீஸ்கரின் இயற்கை வளங்களை கார்ப்பரேட்கள் கொள்ளையடிப்பதற்கு எதிரான போரில் மக்கள், ஆதிவாசிகளுக்குத் துணை நிற்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

*17.*கிராமப்புர வேலையில்லாதிண்டாட்ட துயரத்தைத் தணிக்க மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்ட ஒதுக்கீடு ஆண்டுக்கு குறைந்தபட்சம் ரூ.*2.5* லட்சம் கோடியாக உயர்த்தப்பட வேண்டுமென மத்தியக் கமிட்டி வலியுறுத்துகிறது. நகர்ப்புர, கிராமப்புர ஏழை மக்களுக்கான விரிவான வீட்டுவசதித் திட்டத்தை ஒன்றிய அரசு கொண்டு வருவது அவசியமானதாகும், மேலும் *3* கோடி வீடுகள் என்ற அறிவிப்பு தேவையை நிறைவேற்றாது என்பதால் வீடு எண்ணிக்கையை அதிகப் படுத்துவதோடு, வீடு ஒன்றிற்கு ஒதுக்கப்படும் தொகை குறைந்தபட்சம் ரூ *7* லட்சமாக உயர்த்தப்பட வேண்டும். ❑

**நெல்லை மாவட்ட சிபிஐஎம் கட்சி அலுவலகத்தின் மீதான தாக்குதலைக் கண்டித்தும் மாஞ்சோலைத் தொழிலாளர்கள் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவும் கோரி நெல்லையில் 16.6.2024 அன்று இகக(மாலெ) சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம்**






**ஏஐசிசிடியு தலைவர்கள் மீதான தாக்குதலைக் கண்டித்து இராணிப்பேட்டையில் 29.6.2024 அன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டம்**



## மணிப்பூர் பற்றி ஜனாதிபதி பேசியிருக்க வேண்டும்

சிபிஐ (எம்–எல்) எம்.பி. சுதாமா பிரசாத் விமர்சனம்

வியாழனன்று நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி திரவுபதி முர்மு ஆற்றிய உரைக்கு நாடு முழுவதும் எதிர்ப்பு வலுத்து வரும் நிலையில், “இந்தியா” கூட்டணியில் அங்கம் வகிக்கும் சிபிஐ (எம்-எல்) கட்சியும் ஜனாதிபதி உரைக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுதாமா பிரசாத் கூறுகையில்,”தற்போது இருப்பது தேசிய ஜனநாயக கூட்டணி அரசு ஆகும். ஆனால் ஜனாதிபதி உள்ளிட்ட பாஜகவினர் இதை பெரும்பான்மை அரசு என்று கூறி வருகின்றனர். ஜனாதிபதி ஒரு பெண்ணாக மணிப்பூர் பற்றி பேசியிருக்க வேண்டும். அங்கு பெண்கள் முழு நிர்வாணமாக இழுத்துச் செல்லப்பட்டனர். மக்கள் வீடற்றவர்களாக மணிப்பூரில் ஆக்கப்பட்டு பெரும் துயரத்தில் உள்ளனர். இந்தியாவிற்கு பெருமை தேடித்தந்த மல்யுத்த வீராங்கனைகளுக்கு இன்னும் நமது நாட்டில் நீதி கிடைக்கவில்லை. இதை எதையும் பேசாமல் மேம்போக்காக பாஜக எழுதிக் கொடுத்ததை பேசிய ஜனாதிபதி உரை என்பது முழுப் பொய்களால் நிரம்பி உள்ளது” எனக் கூறி கண்டனம் தெரிவித்துள்ளார்.

நன்றி: தீக்கதிர்

MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 05.07.2024 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023

# அருந்ததிராய்-ஹுசைன் மீது போடப்பட்ட உபா வழக்கை திரும்பப் பெறக் கோரி
















## கோவை தூய்மைப் பணியாளர்கள்



## திருவள்ளூர் ஆட்சியர் அலுவலகம் நோக்கி



Owned and Published bys; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh